




# தமிழரசு

16.1.1995 ரூ.3




உலகத் தமிழ்
மாநாட்டில்
உள்ளம் கவர்ந்த
மின்னொளிக்
காட்சிகள்!





# நெஞ்சம் நிறைந்த பொங்கல் வாழ்த்துக்கள்!

**- மாண்புமிகு முதல்வர்**



உலகெங்கும் வாழும் தமிழ் நெஞ்சங்கள் ஒருங்கே கொண்டாடி மகிழ்கின்ற பொங்கல் திருநாளன்று, எனது உளங்கனிந்த வாழ்த்துக் களை அனைவருக்கும் தெரிவித்துக் கொள்வ தில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

தமிழ் மொழி சிறக்கவும், தமிழ் இனம் பெருமை கொள்ளவும், உலகம் போற்றும் வண்ணம் தமிழ் அன்னைக்கு விழா எடுத்து ஆராதனை செய்த குதூகலத்தில் திளைத்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில் கொண்டாடும் பொங்கல் நமக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகிறது.

இயற்கை அன்னையின் அருளால், வேளாண் வளமும், தொழில் வளமும் முன்னர் எப்போதும் இல்லாத அளவிற்குத் தமிழ்நாட்டில் சிறந்து விளங்கி அனைவரது வாழ்விலும் வளம் சேர்ந்து நமது முயற்சிகள் அனைத்திலும் வெற்றிமேல் வெற்றி குவிந்திடும் இந்த வேளையில், தமிழ்நாட்டிலுள்ள, எனது அன் பிற்குரிய வேளாண் பெருங்குடி மக்களுக்கும், அனைத்துத் தரப்புச் சகோதர, சகோதரி களுக்கும் மற்றும் உலகெங்கும் வாழும் தமிழ்ச் சமுதாயத்தைச் சார்ந்த பெருமக்கள் அனை வருக்கும் எனது நெஞ்சம் நிறைந்த பொங்கல் வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

## இந்த இதழில்...


உலகத் தமிழ் மாநாடு: மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் பேருரை . . . . 2

உலகத் தமிழ் மாநாட்டில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடக்க உரை . . . . 6

கலைக்காட்சிப் பேரணி . . . . 11

உலகத் தமிழ் மாநாடு:

முதல் நாள் நிகழ்ச்சிகள் . . . . 14

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் . . . . 20

மூன்றாம் நாள் நிகழ்ச்சிகள் . . . . 25

நான்காம் நாள் நிகழ்ச்சிகள் . . . . 29

ஐந்தாம் நாள் நிகழ்ச்சிகள் . . . . 34

உலகத் தமிழ் மாநாடு: மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் நிறைவுரை . . . . 38

மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிறைவுரை . . . . 43

உலகத் தமிழ் மாநாடு: சில அலங்கார ஊர்திகள் . . . . 48


### இதழ்தோறும் ஓர் இனிய குறள்

**விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து**
**உள்நின்று உடற்றும் பசி (13)**

* மழை பெய்யாமல் பொய்படுமானால், கடல் சூழ்ந்த அகன்ற உலகமாக இருந்தும் பசி உள்ளே நிலைத்து நின்று உயிர்களை வருத்தும்.


**தமிழரசு**

திருவள்ளுவர் ஆண்டு: 2026

தைத் திங்கள்: 2

மலர்: 25 இதழ்: 14

16.1.1995

விலை: 3

# 'இந்தியாவின் நாடித்துடிப்பைத் தமிழ்மூலம் கேட்கலாம்'

## எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் அவர்கள் பேருரை




**தஞ்சைத் தரணியில், எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டை, மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் திரு கே.ஆர். நாராயணன் அவர்கள் தொடங்கிவைத்தார். அப்போது அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:**

எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டிற்கு வருகை தந்துள்ள உங்களனைவருக்கும் மேதகு குடியரசுத்தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா அவர்களின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மாநாட்டைத் தொடங்கிவைக்க அவர் ஆவலுடன் இருந்தார். ஆனால், தவிர்க்க முடியாத காரணங்களினால் இன்று டெல்லியை விட்டுப் புறப்பட இயலவில்லை. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் அன்பழைப்பினை ஏற்று இந்தச் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தஞ்சை மாநகரில் இம்மாநாட்டைத் தொடங்கி வைப்பதில் நானும், என் மனைவியும் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறோம். எங்களுக்கு அளிக்கப்பட்ட இந்த உற்சாகமான வரவேற்பிற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவின் தலைசிறந்த மொழிகளில் ஒன்றாகத் திகழும் தமிழ் இன்று சர்வதேச மொழியாக விளங்குகிறது. சர்வதேச வாழ்க்கையில், தமிழ்க் கலாச்சாரம் ஒரு உயிரோட்டமாக விளங்குகின்றது. உலகின் 23 நாடுகளில் இருந்து இந்த மாநாட்டுக்கு வருகை புரிந்துள்ள சிறந்த மேதைகளே இந்த உண்மைக்குச் சான்றாகத் திகழ்கிறார்கள். பண்டைய காலம் முதல் பல்லவ, சோழ, பாண்டிய ஆட்சிகளின் கீழ் தமிழ் மக்களின் அறிவாற்றலும், முற்போக்கு எண்ணங்களும், இந்திய நாட்டின் எல்லைகளைக் கடந்து, நமது அண்டைநாடுகளின், தூரதேசங்களின் வாழ்க்கையையும், கலாச்சாரத்தையும் வளமாக்கிக் கொண்டு வந்திருக்கிறது.

தமிழ் மொழியும், கலாச்சாரமும் 2500 ஆண்டுகள் வரலாற்றைப் பெற்றிருக்கின்றது. ரிக்வேதத்தில் தமிழ் வார்த்தைகளையும், வட இந்தியாவின் பல பாகங்களில் திராவிடக் கலாச்சாரத்தையும், சின்னங்களையும், வல்லுநர்கள் கண்டுபிடித்துள்ளார்கள். சமீப காலத்தில் தமிழ் மொழிக்கும், ஆப்பிரிக்க மொழிக்கும் ஒற்றுமைகள் இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. செனகால் நாட்டின் கவிஞர் - ஜனாதிபதி இந்தியாவிற்கு வருகை புரிந்துள்ள போது தமது நாட்டு மொழிக்கும், தமிழ் நாட்டின் மொழிக்கும் ஒற்றுமையைக் கவனித்து ஆச்சரியமடைந்து இந்தக் கலாச்சார



ஒற்றுமையைப் பற்றி ஆராயத் தேவையான நடவடிக்கைகள் எடுத்தார்.

இந்தியாவில் சமஸ்கிருதம் பரவிய போது தமிழும் திராவிட மொழிகளும் வெல்லப் பட்டன என்று கருதப்படுகிறது. திராவிட மொழிகளின் மீது சமஸ்கிருத மொழியின் ஆதிக்கத்தை யாராலும் மறுக்க முடியாது என் றாலும், தமிழ்மொழி சமஸ்கிருத மொழியின் மீது ஏற்படுத்திய பாதிப்பைபோதுமான அளவு அங்கீகரிப்பதில்லை. திராவிட மொழிகளில் உள்ள சில வார்த்தைகள் சமஸ்கிருதத் திலிருந்து வந்தவை என்று கருதப்படுகிறது. ஆனால், அவை திராவிட மொழிகளில் இருந்து சமஸ்கிருதத்திற்குச் சென்றது என அறிஞர்கள் இப்போது கருதுகின்றனர். சூத்திரகாவின் சமஸ்கிருத நாடகமான ''மிருச்சகாடிகம்'', தமிழ்க் காவியமான சிலப்பதிகாரத்தைப் போன்று உள்ளது என்றும் கி.பி. இரண்டு அல்லது மூன்றாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட தமிழ்க் காப்பி யமான சிலப்பதிகாரத்தின் தூண்டுதலாலே இது எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று ஒப்பிலக்கிய மாணவர்கள் கருதுகிறார்கள்.

திராவிட மொழிகளில் தமிழ்மொழி மிகப் பழமையானது என்பதையும் அது மற்ற மொழிகளை ஊக்கப்படுத்தியது என்பதையும் நாம் அறிவோம். ஒரு மலையாளி என்ற முறையில், மலையாளம் தமிழின் வளர்ப்புக் குழந்தை என்று சொல்வதில் நான் பெருமிதமடைகிறேன். சமீபகாலத்தில் தமிழ், ஆங்கிலத்திற்கு ஐரோப்பிய, தென்கிழக்கு ஆசிய மொழிகள் அநேக வார்த்தைகளையும், திட்டங்களையும் வழங்கியுள்ளது. இந்தப் பொருள் குறித்து தீவிரமாக ஆராயப்பட வேண்டும். மொழி ஆதிக்கம் மட்டுமின்றி தென் இந்தியாவில், குறிப்பாக தமிழ்நாட்டில் கலைகளும் இசை, நடனம், கட்டடக்கலை ஆகிய கலைகளும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளன. எனவே, இந்திய மொழிகளில் தமிழ் மொழி ஓர் உயர்ந்த மொழியாகும். அதன் அனைத்துக் கலாச்சார அம்சங்களுடன் ஒரு சர்வதேச மொழியாகிறது. உலகின் அனைத் துப் பண்டைய மொழிகளை ஒப்பிட்டுப் பார்த்தாலும் தமிழ் மொழிக்கென்று தன்னிரகற்ற அம்சங்கள் பல உண்டு. “அடிப்படையில் எந்த மாற்றமும் ஏற்படாமல் 2500 ஆண்டுகளுக்குப் பேச்சு வழக்கில் தொடர்ந்து இருக்கும் ஒரே பண்டைய மொழி தமிழ் தான்" என 'என்சைக்ளோபீடியா பிரிட்டானிகா' கூறுகிறது. தமிழ் ஒரு பேச்சு மொழியாகத் தொடர்ந்து இருந்தது மட்டுமின்றி, இன்று பிரம்மாண்டமான நவீன மொழியாகவும் தமிழ் விளங்குகிறது என்பதை நான் குறிப்பிட்டாக வேண்டும். அது இன்று வளமிக்க இலக்கியமாக மலர்ந்துள்ளது. இலக்கிய உணர்வுகளை மட்டுமின்றி, நவீன விஞ்ஞானச் சிந்தனைகளையும் வெளிப்படுத் தும் கருவியாகத் தமிழ் விளங்குகிறது.


தேசத்தந்தை மகாத்மா காந்தியடிகளை விடச் சிறந்த முறையில் தமிழைப் பாராட்டிய வர்கள் வேறுயாரும் இருக்க முடியாது. 1909-ஆம் ஆண்டு தென் ஆப்பிரிக்காவில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது அவரு டைய ''Indian Opinion''-இல் அவர் குறிப் பிட்டதாவது "இப்போரில் (டிரான்ஸ்வல்

சத்தியாகிரகப் போராட்டம்) வேறெந்த இந்தியனின் சாதனையும் தமிழர்களின் சாதனைக்கு ஈடாகாது. எனவே, வேறெந்த காரணத்திற்காக இல்லாவிட்டாலும், மனத்தள விலாவது அவர்களுக்கு என் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிக்கவாவது, நான் கவனமாகத் தமிழ் படிக்க வேண்டும் என எண்ணுகிறேன். எனவே, கடந்த ஒரு மாதம் தமிழைக் கற்கவே செலவழிக்கப்பட்டது. அதைப் படிக்கப் படிக்க, அம்மொழியின் அழகை நான் அதிகமாக ரசிக்க முடிகிறது. அது ஒரு சிறந்த இனிமையான மொழியாகும். தமிழ் ஏராளமான அறிவாளிகளை, மேதை களை உருவாக்கியுள்ளது - உருவாக்கி வரு கிறது. மேலும் இந்தியா ஒரே நாடாக இருக்கப் போவதால் சென்னைக்கு வெளியேயுள்ள இந்தியர்களும் தமிழ் படித்தாக வேண்டும்." பிறகு 1913-இல் தென் ஆப்ரிக்காவில் ஒரு

பெருமையில் ஊன்றி உள்ளது. மக்களின் பழமையான கலாச்சாரம், பழக்க வழக்கங்கள், சிந்தனைகள், கனவுகள் ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ளது. மகாகவி பாரதி தனது "எங்கள் தாய்" என்னும் பாடலில் கீழ்க்காணுமாறு கூறியுள்ளார்:

"முப்பது கோடி முகமுடை யாளுயிர்
மொய்ம்புற வொன்றுடையாள் - இவள்
செப்பு மொழிபதி னெட்டுடையாள் எனிற்
சிந்தனை யொன்றுடையாள்"

இன்று- இந்தியத் தாய்க்கு 90 கோடி முகங்களுண்டு. அவற்றில் மிகவும் ரம்மிய மானதும், "கம்பீரமான உறுதியான வாழ்க் கையைப் பிரதிபலிக்கும்" முகம் தமிழ் முக மாகும். தேன் போன்ற இனிமையான தமிழ் மொழி மூலம், இந்தியாவின் நாடித் துடிப் பைக் கேட்கலாம்.



பள்ளிக்கூடம் தொடங்கப்பட்டு, அதில் பள்ளி நேரத்தில் குஜராத்தி மொழி கற்பிக்கப் பட்டபோது, (தமிழ் இல்லாமல்) காந்தி அரசாங்கத்தினை எதிர்த்தார். மக்களையும் போராடும்படி அறிவுறுத்தினார். 1933-இல் தமிழ் ஆர்வலர்கள் மாநாட்டிற்குக் காந்தி அடிகள் வாழ்த்துச் செய்தியை அனுப்பிய போது "மேலோட்டமாக எனக்கு இருக்கும் தமிழறிவு அம்மொழியின் அழகையும், வளத் தையும் அனுபவிக்க உதவியது. அதை ஒதுக்குவது என்பது குற்றமாகும்" என்று கூறினார். மகாத்மா காந்தியடிகள் அவர் களின் கருத்தைப் பிரதிபலிக்கும் வண்ணம் இந்த மாநாட்டைக் கூட்டியவர்களை நான் பாராட்டுகிறேன். நாம் இங்கே இப்போது காண்பதெல்லாம், தமிழ் ஒரு வட்டார மொழி யாகவோ, தேசிய மொழியாகவோ அல்லாமல் ஒரு சர்வதேச மொழியாகக் கொண்டாடப் படுவதையே காண்கிறோம்.

தமிழ் ஒரு உலக மொழி என்ற நிலையின் வேர். அது ஒரு இந்திய மொழி என்ற

"சேர நன்னாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்துத்
தோணிகளோட்டி விளையாடி வருவோம்"

என்று சுப்பிரமணிய பாரதி பாடியதை விட வேறு எவரும் அவ்வளவு அழகாகவும் உணர்வு பூர்வமாகவும் இந்தியாவின் ஒற்று மையைப் பற்றிப் பாடியதில்லை. பாரதியின் கீழ்க்காணும் வரிகளில் சாகாவரம் கொண்ட ஆர்வம் புலப்படுகிறது.

"மந்திரங் கற்போம் வினைத் தந்திரங்கற்போம்
வானை யளப்போம் கடல் மீனையளப்போம்
சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம்
சந்தி தெருப் பெருக்கும் சாத்திரங்கற்போம்"

நிலவையும் நட்சத்திரங்களையும் கடலின் ஆழத்தையும் அளக்க நாம் ஓரளவு தெரிந்து வைத்துள்ளோம். ஆனால், தெருக்களைச் சுத்தப்படுத்தி, தூய்மையாக வைத்துக் கொள் ளும் பணியை நாம் இன்னும் கற்கவில்லை என அறிகிறேன். மனத்தின் தத்துவ விசாலங்

களுக்கும் விஞ்ஞானத தொழில் நுட்பங் களுக்கும் அளிக்கப்படும் அதே முக்கியத்து வம், நமது சுற்றுப்புறங்களைத் தூய்மையாக வைத்திருப்பதற்கும், சமுதாயத்திலுள்ள, மகளிர், குழந்தைகள் ஏழைகள் ஆகியோர் களின் பிரச்சினைகளுக்கும் வழங்கியிருப்பதே தமிழ்க் கவிஞர்களின் சிந்தனையாளர்களின் கருத்தாகும்.

மதிய உணவுத்திட்டத்திற்கும், குழந்தை களின் நல்வாழ்வு கல்வி உரிமைகள் ஆகியவற்றை மேம்படுத்தவும், பெண்களின் சமுதாய நிலைமை, கல்வி உரிமைகள் ஆகியவற்றை உயர்த்தவும் மக்களின் நலத்திற்காகச் சமுதாய மேம்பாட்டுத் திட்டத்தை அமல்படுத்தவும், திட்டங்களைத் தீட்டும் தமிழக அரசு அதே நேரத்தில், மாநில தொழில் மயமாக்குவதற்கு ஒரு முன்னேற்றத் திட்டமும், வெளிநாட்டு மூலதனம், ஏற்றுமதி மேம்பாடு, நவீன விஞ்ஞான மற்றும் தொழில் நுட்ப மேம்பாட்டிற்காகத் திட்டங்களை வகுப்பதைக் காணும்போது சுப்பிரமணிய பாரதியாரின் கவிதை வரிகள் எனது நினைவுக்கு வருகின்றன.

இம்மாநாட்டில் கலந்து கொள்ளும் பிரதிநிதிகள் தமிழ்நாட்டின் மொழி இலக்கியம், கலாச்சாரம் ஆகியவற்றை விவாதிப்தோடு மட்டுமல்லாமல், தற்போது மாநிலத்தில் மலர்ந்து வரும் பொருளாதாரத் தொழில் நுட்ப மேம்பாடுகளையும் காண இயலும். இந்த மாநாட்டில் நீங்கள் தொன்மை மற்றும் நவீன தமிழ் இலக்கியம், ஆட்சிமொழி பிரச்சினை, பெண்களின் நிலைமை, தமிழர்களின் சமுதாயம், விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பம், 21-ஆம் நூற்றாண்டு மற்றும் கலைகள் ஆகியவற்றைப் பற்றி விவாதிப் பீர்கள் என்று நம்புகிறேன்.

பண்டைய இலக்கியம் மற்றும் கலைகள் பற்றி இதுவரை நான் ஒன்றும் குறிப்பிட வில்லை. மேதைகள் நிறைந்த இந்த அரங்கில் அதைச் சொல்ல நான் தயங்குகிறேன். தமிழ் இலக்கியத்தின் செழுமையும் வளமையும், புதுமையும், மனிதநேயமும் நன்கு தெரிந்ததே. அதே போலத்தான் வாழ்க்கை நடைமுறைக் குத் தேவையான உலக சிந்தனை மற்றும் வழிகாட்டுதல் அடங்கிய, மனித சமுதாய முழுமைக்கும் பொருந்துவது திருக்குறளாகும். மனித ஒழுக்கத்திற்கான விதிமுறைகள் அடங்கிய இந்தப் புத்தகம் எழுதப்பட்டு 18 நூற்றாண்டுகளுக்குப் பின்பு இன்றும் அதே வேகத்துடனும் என்றும் அதே வேகத்துடன் திகழும் சமுதாயத்தைப் பற்றியும் சமூகத் தகுதி பற்றியும் பேசும் போது ஒருவர் தமிழ்ச் சமுதாயத்தில் பெண்களின் நிலை பற்றிப் பேசாமல் இருக்கமுடியாது. தமிழ் இலக்கியத் திற்குக் கணிசமான அளவு பெண்கள் தங்கள் பங்கை ஆற்றியுள்ளனர்.

சமீப காலத்தில் சமூக அரசியல் நடவடிக்கைகளில் அவர்கள் முன்னணியில் இருந்து வருகின்றனர். இந்தியாவில் முக்கியமான காலகட்டங்களில், பெண்கள் நாட்டின் தலைமையை ஏற்று நடத்த முடியும் என்று நிரூபித்துள்ளார்கள். கவிதை, நாடகம், புதினம் ஆகியவற்றில் மட்டும் பெண்கள் போற்றத்தக்க கதாநாயகிகளாக மட்டு மல்லாமல், நாட்டின் உண்மையான வாழ் விலும் அவ்வாறு திகழ்கின்றார்கள். சமுதாய முன்னேற்றத்தின் அடையாளமே, சமுதாயத் தில் பெண்களின் நிலையைப் பொறுத்தே உள்ளது என்று ஜவகர்லால் நேரு அடிக்கடி கூறினார்.


சமுதாயத்தில் பெண்களின் முன்னேற்றம், அதிகாரம் அவர்களது கரங்களுக்கு வருதல் ஆகியவற்றில் தமிழகம் இந்தியவிலேயே முன்னணியில் நிற்கின்றது என்பதைக் காணும் போது மகிழ்ச்சிகரமாக உள்ளது. இந்தியக் கலாச்சார வரலாற்றில் 2 கொள்கைகள் தனித்து நிற்கின்றன. பக்தி மற்றும் உலக மனித நேயம் தமிழ்க் கலாச்சாரம் இலக்கியம் ஆகியவற்றில் இவை இரண்டும் பண்டையக் காலத்திலிருந்து நவீன காலம் வரை இருந்து வருகிறது. சங்கப் புலவர் ஒருவர் ஒன்று எழுதினார். "யாதும் ஊரே, யாவரும் கேளிர்". சாதி, மதத் தடைகளைக் கடந்து பக்திப் பரவசத்துடன் பாடியது இந்தியாவிலேயே நந்தனாருக்கு இணையாக யாரும் கிடையாது. மனிதநேயத்திலும், பக்திமார்க்கத்திலும், தமிழ்க் கலாச்சாரம் மனித அனுபவங்களின் உச்சத்திற்கே சென்று விடுகின்றன. இத்தகைய உயர்வான எண்ணங்களையும், அனுபவங் களையும், அழகோடும் தெளிவுடனும் தமிழ் மொழியை வெளிப்படுத்தலாம். பல்வேறு மொழிகளுடன் ஒற்றுமையாகத் திகழும் இந்தியாவின் அங்கமாக இது விளங்கு கின்றது. பல்வேறு மொழிகளில் எழுதப் பட்டிருந்தாலும், இந்திய இலக்கியம் ஒன்றா கவே கருதப்படுகிறது. இந்தியாவின் இலக்கிய மும், சிந்தனையும் ஒன்றாகி, தன்னுடைய புகழோடு வெளிப்படுத்துவது தமிழ் மொழி ஆகும்.



- எட்டாம் உலகத் தமிழ் மாநாடு: தமிழன்னைக்கு நாம் செய்யும் ஆராதனை!
- நான்காம் தமிழை-அறிவியல் தமிழை வளர்க்க வேண்டும்!
- உலக அரங்கில் தமிழ் மொழிக்குத் தனியிடத்தைத் தொடர்ந்து தக்க வைக்க வேண்டும்!

# தஞ்சைத் தரணியில் நடந்த மாநாட்டுத் தொடக்க விழாவில்

**வ**ரலாற்றுத் தொன்மையும், இலக்கியச் சிறப்பும் மிக்க உலக மொழிகளில், தனக் கென்று ஒரு தனி இடத்தைப் பெற்றுள்ள செம்மொழி, அமிழ்தினும் இனிய நம் அருந்தமிழ் மொழி ஆகும். உலக மொழிகளில் தொன்மையான மொழிகள் பல, இன்று வழக்கொழிந்து போனாலும், இன்றும் தனது சீரிளமைத் திறன் சிறிதளவும் குன்றாமல் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் பிருந்தே, சிறந்த இலக்கணத்தையும், வளமான



இலக்கியத்தையும் கொண்டு உயர்தனிச் செம் மொழியாக விளங்கிக் கொண்டிருக்கிறது, தமிழ் மொழி. தொன் மொழிகளில், இன்று பேச்சு வழக்கில் இருந்து வருகின்ற ஒரே மொழி, நம் தமிழ் மொழியாகும். தமிழ் மொழியை, நம் உயிரெனப் பேணிக் காத்து, எதிர்வரும் நூற்றாண்டுகளின் சவால்களை எதிர்கொள்கின்ற, ஆற்றலையும், அறிவையும் அளிப்பதே, இன்றைய நமது கடமை.

"தொண்டு செய்வோம் தமிழுக்கு,
துறைதோறும் துறைதோறும்
துடித்தெழுந்தே"

என்று, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், அறைகூவல் விடுத்தது போல, தமிழ் மொழியை மேம்படுத்தவும், செம்மைப்படுத்தவும் நாம் அனைவரும் தஞ்சைத் தரணியிலே கூடியுள்ளோம். விழுமியதோர் வரலாறு படைத்த நம் தமிழ் அன்னைக்கு, நாம் செய்யும் ஆராதனை, இந்த மாநாடு என்றால், அது மிகையாகாது.

**தமிழ்த் தாய்க்கு ஆராதனை!**

பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள், இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டை, *1968*-ஆம் ஆண்டு, சிங்காரச் சென்னையிலே, சிறப்புற நடத்திக் காட்டினார்கள்.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், சங்கம் வளர்த்த கூடல் மாநகர் மதுரையில் ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டை, 1981 இல், உலகம் பாராட்ட நடத்திக் காட்டினார்கள்.

இன்று அவர்களின் வாரிசாக, உங்கள் அன்புச் சகோதரியாகிய நான், உங்கள் அனைவரின் சார்பிலும், இந்த எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டை நடத்தி, தமிழ்த் தாய்க்கு ஆராதனை செய்ய விழைந்துள்ளேன்.

ஒவ்வொரு மொழிக்கும், ஒரு தனித் தன்மை இருப்பது உண்டு. ஆனால், நம்

# எட்டாவது உலகத் தமிழ்
# மாண்புமிகு முதல்வர் முழக்கம்

தமிழுக்கு இருக்கும் தனித் தன்மை, வேறு மொழிகளுக்கு நிச்சயமாக இருக்காது. தான் சிதையாமல், மற்ற மொழிகளை வளர்க்கும் தனித் தன்மையும், ஆற்றலும், தமிழ் மொழிக்கு மட்டுமே உண்டு.

**உலகம் வியக்கிறது !**

தமிழ் மொழி மற்ற மொழிகளை வளர்த்ததாகத் தான், வரலாறு இருக்கிறதே தவிர, அழித்ததாக இல்லை. அரசியல் படையெடுப்புகள், பல நேரங்களில், மொழி களின் ஆதிக்கங்களாகவும் மாறுவது உண்டு, இதற்கு நிறைய சான்றுகளை, வரலாற்றில் நாம் காட்ட முடியும். ஆனால், தமிழைப் பொறுத்த வரையில், இந்தச்சான்று பொருந் தாது. ராஜராஜ சோழன், கீழ்த் திசை நாடு களுக்குப் படையெடுத்து, தனது அரசியல் ஆதிக்கத்தை விரிவாக்கினாலும் அந்நாட்டு மொழிகள், தமிழின் உறவாலும், அதன் தாக்கத்தாலும், ஆக்கம் பெற்றனவே தவிர, அழிந்துபடவில்லை.

மற்ற மொழிகளை வளர்த்த தமிழ் மொழி, அதே நேரத்தில், தான் சிதையாமல் வளர்ந்து வந்துள்ளது என்பதும் கண்கூடு, தமிழில் காணப்படும் அக இலக்கியங்களைப் போல வும், நீதி இலக்கியங்களைப் போலவும், பக்தி இலக்கியங்களைப் போலவும், வேறு சில வளர்ந்த மொழிகளில் இல்லை என்பதை, நிச்சயமாகக் கூற முடியும். இளமை, இனிமை, தொன்மை, தெய்வீகத் தன்மை, என்னும் அனைத்து நற்பண்புகளையும், முழுமையாகப் பெற்றுள்ள தமிழ் மொழி ஒரு புறம், பழமைச் சிறப்புகளோடு விளங்குவதைப் போலவே இன்னொரு புறம், இளமைத் துடிப்போடு வளர்ந்து கொண்டிருக்கிறது என்பதைப் பார்த்து, உலகம் வியக்கிறது.

**அறிவுச் செல்வங்கள்**

"தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்று, உணர்ச்சிப் பெருக்கோடு கூறும் நாம், தமிழின் நாளைய வளர்ச்சிக்கு, ஓர் உறுதியான பாதையை வகுத்துத் தருவதே, இன்றைய தலைமுறையின் கடமை என்பது, எனது கருத்து. யாருக்கும் கிடைக்காத ஒரு மாபெரும் களஞ்சியத்தை, பொன்னெனப் போற்றிப் பாதுகாப்பது, நம் கடமையல்லவா?

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த, ஒரு மாபெரும் பாரம்பரியத்திற்குச் சொந்தக் காரர்கள் நாம். காலந்தோறும் மாறி வரும் புதிய சிந்தனைகளுக்கு ஏற்ப, நமது மொழியை வளர்க்க வேண்டிய அவசியமும், தேவையும் இன்று அதிகரித்துள்ளது என்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

மனித வரலாற்றில், இந்த நூற்றாண்டைப் போல, அறிவியலும், தொழில் நுட்பமும், வேறு எந்த நூற்றாண்டிலும், இத்தனை அசுர வேகத்தில், வளரவில்லை என்பது கண்கூடு. ஏன்? இந்த நூற்றாண்டின் துவக்கத்திற்கும் இறுதிக்கும் இடையே, நிகழ்ந்துள்ள வேகமான மாறுதல்களை, மனித குலத்தின் அசுர வளர்ச்சி என்பதைத் தவிர, வேறு எப்படிக் குறிப்பிட முடியும்? மாற்றங்கள் என்பது, வாழ்க்கையின் அடிப்படைக் கூறுபாடாக விளங்கினாலும், அந்த மாற்றங்களும், அவற்



றின் விளைவுகளும், விசுவரூபம் எடுத்திருப்பது, நாம் வாழ்ந்து கொண்டிருக்கும், இந்த நூற்றாண்டில் தான் என்பதை, எவரும் மறுக்க முடியாது.

"சென்றிடுவீர் எட்டுத் திக்கும் - கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு
சேர்ப்பீர்"

என்று, செந்தமிழை வளர்ப்பதற்குப் பாதை அமைத்து வழிகாட்டினார், மகாகவி சுப்பிரமணிய பாரதியார்.

இந்த நூற்றாண்டின் அறிவுச் செல்வங்கள் அனைத்தையும், தமிழுக்குக் கொண்டு வர வேண்டும். இனி வரும் நூற்றாண்டுகளுக்கும், அருந்தமிழை ஆயத்தப்படுத்த வேண்டும். இந்த இரண்டு கடமைகளையும், நாம் விரைந்து நிறைவேற்றியாக வேண்டும்.


**உலக அரங்கில் தமிழுக்குத் தனி இடம்**

இயல், இசை, நாடகம் என்று, மூன்று கூறுகளாகத், தமிழைப் பிரித்துப் பார்த்த நாம் வளர்ந்து வரும் அறிவியல் உணர்வையும், அறிவையும், மொழியில் புகுத்துவதற்கு, ஒரு நான்காம் தமிழை- அறிவியல் தமிழை வளர்க்க வேண்டும். ஆன்மீகத்தில் சிறந்து விளங்கும் தமிழ், அறிவியலிலும் சிறந்து ஓங்க வேண்டும். அறிவியல் உணர்வும், அறிவியல் கோட்பாடுகளும், தமிழில் கொண்டு வரப்பட்டு, தமிழில் கற்பிக்கும் அளவிற்குத் தமிழ் மொழியை நாம் வளர்த்தாக வேண்டும். தமிழால் முடியாதது எதுவும் இல்லை, என்ற உன்னதமான சூழ்நிலையை உருவாக்குவதே, இன்றைய தேவை ஆகும். அந்த நிலையை அடைய, நாம் பாடுபடுவோம் என்பதும் உறுதி.

தமிழ் மொழியின் பழஞ்சிறப்புக்களை எண்ணி, குதூகலம் அடையும் அதே வேளையில் தமிழை மேம்படுத்தவும், சீர்படுத்தவும், உலக அரங்கில், தமிழ் மொழிக்கு என ஒரு தனியிடத்தைத் தொடர்ந்து தக்க வைக்கவும், வழிவகை காண வேண்டும் என்று அறிஞர் குழாமைக் கேட்டுக் கொள்கிறேன்.

எட்டாவது உலகத் தமிழ் மாநாடு நடைபெறுகின்ற இந்த இனிய வேளையில், புத்தம் புதிய சிந்தனைகள், உலகளாவிய தமிழர்களின் உணர்வுகளையும், சிந்தையையும், எளிதில் கவரும் என்பதில் ஐயமில்லை.

அன்றன்று புதுமையைக் காண வேண்டும் என்கின்ற ஆர்வம், மனித குலத்தின் இயல்



பாக மாறி வருகின்ற சூழ்நிலையில் முன்னைப் பழமைக்கும், பின்னைப் புதுமைக்கும், ஈடு கொடுக்கும் வண்ணம், நம் தமிழ் மொழியின் தனித் தன்மை, சிதைந்து விடாமல் வளர வேண்டும். தமிழ் மொழி, தமிழர்க்கு மட்டும் உரிய மொழியன்று இந்தத் தரணிக்கே உரிய மொழி, என்பதை உணர்த்துவதற்காக, இந்த மாநாடு ஒரு அடையாளமாக, ஆரம்ப கட்டமாக அமையும் என்று உறுதியாக நம்புகிறேன்.

**நற்குணங்களின் இருப்பிடம்!**

மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள், தஞ்சைக்கு வந்து, எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டைத் துவக்கி வைப்பதற்குத் தனது ஒப்புதலை ஏற்கெனவே அளித்து இருந்தாலும் சில அவசர அலுவல்கள் காரணமாக, இந்த விழாவில் கலந்து கொள்ள இயலவில்லை. இருப்பினும், மாநாடு தொடங்குவதற்கு, மிகக் குறுகிய காலமே இருக்கின்ற சூழ்நிலையிலும், மிகவும் பெருந்தன்மையுடன், நமது

அழைப்பை ஏற்றுக் கொண்டு, மாநாட்டைத் துவக்கி வைப்பதற்காக, டெல்லியிலிருந்து வந்துள்ள, மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர், திரு கே.ஆர். நாராயணன் அவர்களுக்கு, எனது சொந்த சார்பிலும், தமிழக அரசில் சார்பிலும் தமிழ்நாட்டில் மட்டுமின்றி, அகில உலகத்திலும் வாழுகின்ற தமிழ் மக்கள் அனைவரின் சார்பிலும், நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்கிக் கொள் கிறேன்.

அரசியல் நிர்ணயச் சட்டத்தின் கீழ், மிகப் பெரிய பொறுப்பை வகித்துக் கொண்டி ருந்தாலும், பெரிய மனமும், மனிதாபி மானமும், அனைத்து நற் பண்புகளையும், தன்னகத்தே கொண்ட, நல்ல உள்ளம் படைத்த ஒரு திறமைசாலி, நமது மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர், திரு கே.ஆர். நாராயணன் அவர்கள் தன்னடக்கம், எளிமை, மனித நேயம், இனிமை, அன்பு, பாசம் ஆகிய நற் குணங்களின் இருப்பிடமாக இருப்பவர், திரு கே.ஆர். நாராயணன் அவர்கள் என்றால், அது மிகையாகாது.

உலகம் முழுவதும் வாழும், தமிழ் மக்களின் மனம் குளிரும் வண்ணம், இந்த தமிழ் மாநாட்டில் கலந்து கொண்டு, சிறப்பித்தமைக்காக தமிழ்கூறும் நல் உலகம், குடியரசுத் துணைத் தலைவர், திரு கே.ஆர். நாராயணன் அவர்களை, என்றென்றும் நன்றியுடன் நினைவுகூரும், என்பதில் ஐயமில்லை. குடியரசுத் துணைத் தலைவர் போன்றதொரு, மிகப் பெரிய பொறுப்பில் உள்ள ஒருவர், மிகக் குறுகிய காலத்தில், இது போன்ற மாபெரும் விழாவிற்கு வருவதற்கு, தனது இசைவைத் தெரிவித்துள்ளார் என்றால் அது, அவர் தமிழக மக்கள் மீது வைத்துள்ள அன்பையும் அவர்கள் நலனில் அவருக்கு உள்ள, அபரிமிதமான ஈடு பாட்டையும் தமிழ் மொழியின் மீது, அவருக்குள்ள மரியாதையையும் காட்டுகிறது. எனவே, மேதகு குடியரசுத் துணைத் தலைவர், திரு கே.ஆர். நாராயணன் அவர்களுக்குத் தமிழ்கூறும் நல் உலகத்தின் சார்பில், மீண்டும் எனது நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

தமிழ் வளர்ச்சியில், குன்றா முயற்சியுடன் ஈடுபட்டிருக்கும், தமிழ் அறிஞர்களுக்கும் தமிழ் ஆசிரியர்களுக்கும் தமிழில் ஈடுபாடு கொண் டுள்ள, பெருமக்கள் அனைவருக்கும் என் நல்வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் உரித்தாக்கிக் கொள்கிறேன்.

நம் மனங்களில், என்றென்றும் வாழும் தமிழ் மொழி, ஆல் போல் தழைத்து, மென் மேலும் வளர வேண்டும் உலகத்தின் எந்தப் பகுதியிலிருந்தாலும், தமிழர்கள், சிறந்ததோர் வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும். எல்லா வளமும், நலமும் பெற வேண்டும் என்ற எனது நெஞ்சத்து நல்வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

# இசை வெள்ளத்தில் மக்கள் வெள்ளம்!

**உலகத் தமிழ் மாநாட்டையொட்டி, தஞ்சைத் தரணியே விழாக் கோலம் பூண்டிருந்த அதே சமயத்தில், கவின்மிகு கலை நிகழ்ச்சிகளுக்கும் குறைவில்லை. தெருவெல்லாம் தமிழ் செழித்தது. தென்ற லிலே மிதந்து இசை ஒலித்தது. காவலர் அணிவகுப்புத் திடல், இராசராச மணிமண் டபம், தஞ்சைப் பெரிய கோயில் கலியாண சுந்தரம் நினைவுப் பள்ளி, திலகர் திடல், தமிழ்ப் பல்கலைக்கழக அரங்கு ஆகிய வற்றில் கலை நிகழ்ச்சிகள் நாள்தோறும் காலையும் மாலையும் செவிக்கு விருந்து படைத்தன. இன்னிசை, நாட்டுப்புறப் பாடல்கள், வீணை, புல்லாங்குழல் இசை, நாட்டியம், நாடகம், வில்லுப்பாட்டு, சந்தூர்** போன்ற பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடை பெற்றன.

**எந்தெந்த இடங்களில் என்னென்ன கலைநிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன என்ற விவரங்களைத் தஞ்சையில் பல்வேறு இடங்களில் விளம்பரங்களில் எழுதி வைத் திருந்தனர். அதை மக்கள் கூட்டம் கூட்ட மாகச் சென்று பார்த்து, தங்களுக்குப் பிடித்த இடங்களுக்குச் சென்ற வண்ணம் இருந்ததைக் காண முடிந்தது.**

# கலைக்காட்சிப் பேரணி

நெஞ்சையள்ளும் வகையில், தஞ்சைத் தரணியில் 1995 சனவரி 1 முதல் 5 ஆம் நாள் வரை இனிதே நடைபெற்றது எட்டாவது உலகத் தமிழ் மாநாடு.

'இந்த நூற்றாண்டின் அறிவுச் செல்வங்கள் அனைத்தையும் தமிழுக்குக் கொண்டுவர வேண்டும்; இனிவரும் நூற்றாண்டுகளுக்கும் அருந்தமிழை ஆயத்தப்படுத்த வேண்டும்; இந்த இரண்டு கடமைகளையும் நாம் விரைந்து நிறைவேற்றியாக வேண்டும்...' என்றெல்லாம் நாம் ஆற்ற வேண்டிய பணிகள் பற்றி மாண்புமிகு முதல் அமைச்சர், புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் முன்கூட்டியே நமக்கு உணர்த்தியிருக்கிறார்.

அந்தப் பணிகளுக்காக நாம் நம்மைத் தயார் செய்து கொள்ளுமுன் நம் இறந்தகாலப் பெருமைகளைச் சற்றே நினைவு கூர்வது, எதிர்காலச் செயல்பாடுகளுக்கு ஏற்ற வேகத்தையும் விவேகத்தையும் நமக்கு உண்டாக்குவதாக இருக்கும் அல்லவா?

எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் முதல் நாளன்று, தஞ்சாவூரிலே நடைபெற்ற முத்தமிழ்க் கலைக்காட்சிப் பேரணி ஊர்வலம் அந்த வகையிலேதான் அமைந்திருந்தது!

மாண்புமிகு தமிழக முதலமைச்சரும், மற்ற மாண்புமிகு தமிழக அமைச்சர் பெருமக்களும் பிற மாநில, பிற நாட்டு மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் பேராளர்களும் கண்டுகளித்த அந்த ஊர்வலம், ஓரிடத்தைக் கடந்து செல்ல ஏறத்தாழ நான்கு மணி நேரம் பிடித்தது.

கம்பீரமான உடல்வாகும், வான்பார்த்த முறுக்கு மீசையும் கொண்ட காவல் துறையினர் - பண்டைக்கால உடை, தலைப் பாகையோடு மூவேந்தர்தம் கொடிகளேந்தி, அந்த ஊர்வலத்தின் முன்னாலே குதிரைகள் மீது நிமிர்ந்தமர்ந்து அணிவகுத்துச் சென்றார்கள்.

அதையடுத்து - மங்கள வாழ்த்துடன் செந்தமிழ் ஊர்வலம் தொடங்கியது. சீர்மிகுந்த விழாக்களைச் செந்தமிழ் மக்கள் நாதசுர இசையோடு தொடங்குவதுதானே வழக்கம்? அதன்படி முதல் அலங்கார ஊர்தியில் தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி மாணவர்கள் நாதசுர இசை முழக்கிச் சென்றார்கள்.

இன்னொரு அலங்கார ஊர்தியில் ஐம்பெருங்காப்பியங்களை அணிகலனாகவும், திருக்குறளைத் தனிப் பெருஞ் செங்கோலாகவும் கொண்ட முத்தமிழன்னை தாமரை மீது கவினுறக் காட்சி தந்தாள்.

வேறெந்த நாட்டவரும் அல்ல; தமிழனே இந்த மண்ணை முதன் முதலாக நான்கு வகையினதாக இனம்பிரித்த பெருமையாளன். அதை விளக்குவதாக மலைவளம் காட்டும் தலைநிலக் குறிஞ்சியும், காடுறை உலகம் காட்டும் முல்லையும், எழில்மிகு நன்செயின் கழனிசேர் மருதமும், கடலைச் சார்ந்த கவின்பெரு நெய்தலும் ஆகிய நால்வகை நிலங்கள், அடுத்து வந்த நான்கு அலங்கார வண்டிகளில் சித்திரிக்கப்பட்டிருந்தன.

அடுத்த ஊர்தி, கோடை வெப்பக் கொடுமைப் பாலைக் காட்சியைக் காட்டுவதாக இருந்தது; பாணன் பாடினி பாட்டில், ஆயுதங்களைப் போட்டுவிட்டு மெய்மறந்து நிற்கும் ஆறலைகள் வரையும் அதிலே நாம் காண முடிந்தது.

வண்டு துளைத்த மூங்கில் குழலாக இசையெழுப்ப, அருவி தாளம்போட, அவற்றுக்கேற்ப அழகு மயில் ஆட எனப் புலவர் பெருமகன் கபிலர் காட்டும் குறிஞ்சி இலக்கியக் காட்சி அரங்கம் எழிலுற இடம் பெற்றிருந்தது ஓர் ஊர்தியில்.

குவளை பூக்க, தாமரை இதழ் விரிக்க, அதன்மீது வண்டுகள் இசைபாட விளங்கும் மருதநிலக் காட்சியில், மயிலின் ஆடல் அரங்கம் அழகுபடக் காணப்பட்டது மற்றொரு ஊர்தியில்.

'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு' என்ற புரட்சிக்கவிஞர் பாரதிதாசனாரின் திருவுருவோடும் சங்காரம் முழங்கிடும் சிங்கத் தமிழரோடும் திகழ்ந்ததோர் அலங்கார ஊர்தி.

'வானார்ந்த பொதியின் மிசை தேனார்ந்த தமிழ்' என்ற ஊர்தியில், எத்திசையும் புகழ் மணக்க இருந்தபெரும் தமிழணங்கு, பைந்தமிழ்ப் பாண்டியர்களின் பட்டொளி வீசும் புகழிலே வளர்ந்தது; இறைவனே இனிய புலவராக வீற்றிருந்து தமிழ்ச் சங்கத்தில் தழைத்தது; புலவர் நாவில் பொருந்திய பூங்கொடியாகிய தமிழ், வையை நீரோடு ஓடாமல் ஈரோட்டுப் பெரியார் போல் எதிர் நீச்சல் போட்டது; அனல் வாதம் புனல் வாதமெல்லாம் கண்ட அன்னைத் தமிழ் பேறறிஞர் அண்ணாவின் பெருமுயற்சியால் இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டில் இனித்தது; வறுமையுற்ற மக்களுக்கு வாழ்க்கையாக இருந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் உழைப்பால் ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு கண்டு ஆற்றல் மிகுந்தது; இன்று எட்டாவது உலகத் தமிழ் மாநாடு தமிழ் கூறும் நல்லுல

கத்தின் முகவரியாக முடிசூடி இருக்கும் புகழ்த் தலைவியின் மடியிலே வளர்வதை எடுத்துக் காட்டியது.

இயலாய், இசையாய், நாடக மாய் - மூன்று தமிழாய்த் தோன் றும் அழகு ஓர் அலங்கார வண் டியை அணி செய்தது.

வான்மறை தந்த வள்ளுவப் பெருந்தகையின் திருவுருவோடு பாலுக்கொரு காட்சியென குற ளைத் தேர்வு செய்து மூன்று காட்சிகளை விளக்கியது ஓர் ஊர்தி.

தஞ்சை கலைகளுக்குத் தாய கம் என்பதால், செந்தமிழ் இசைக்கு அந்த நாளில் சுவை கூட்டிய நரம்புக் கருவி, துளைக் கருவி, கஞ்சக் கருவி, தோற்றக் கருவி ஆகியவை இன்னொரு வண்டியில் இடம்பெற்றிருந்தன.

முத்துத்தாண்டவர், அருணாச லக் கவிராயர், தில்லைவிடங்கன் மாரிமுத்தாப் பிள்ளை ஆகிய அமுதத் தமிழிசையின் ஆதி மும் மூர்த்திகள் ஓர் ஊர்தியில் உயி ரூட்டப் பெற்றிருந்தனர்.

காவிரிதந்த கருநாடக இசை மூவரான தியாகராச சுவாமிகள், முத்துசாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரிகள் மூவரும் ஓர் அலங் கார வண்டியிலும், நாடகக் கலை வளர்த்த பேராசிரியர் சுந்தரம் பிள்ளை சங்கரதாச சுவாமிகள், பம்மல் சம்பந்த முதலியார், திரு கந்தசாமி நால் வரும் வேறோர் அலங்கார வண்டியிலும் வியத்தகு காட்சி தந்தனர்.

பொன்முடியார் என்னும் பெண்பாற் புலவர், சமுதாயத் திற்கு ஒவ்வொருவரும் ஆற்ற வேண்டிய கடமையை விளக்கி எழுதிய பாடல்காட்சியின் படப் பிடிப்பாக விளங்கியது ஓர் ஊர்தி. 'களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே' என்ற காட்சி அதில் தத்ரூபமாகச் சித்திரிக்கப்பட்டிருந்தது.

அடுத்து வந்த வண்டியில் கையிலிருந்த வேலைக் களிற்றின் மேல் வீசிவிட்டு, மெய்யிலிருந்த வேலைப் பிடுங்கி வீச எத்தனித் தவாறிருந்தான் ஓர் இளைஞன்.

'கொல்லேற்றுக் கோடஞ் சுவானை மறுமையும் புல்லாளே ஆயர் மகள்' என்பதை ஏறுதழு வும் வீரனொருவன் எடுத்துக் காட்டினான் இன்னொரு ஊர்தி யில்.

தன் ஒரே மகனும் களச்சாவு கண்டதைப் பார்த்து மகிழும் தாய் வேறொரு வண்டியில் விளங்கினாள்.

சிலப்பதிகாரத்தின் கற்புக்கரசி வழக்குரை காதை கண்ணகி சிறப் புறத் திகழ்ந்தனள் ஓர் ஊர்தியில்.

பசிப்பிணி மருத்துவி மணி மேகலை பாங்குடன் விளங் கினாள் வேறொரு வண்டியில்.

முறத்தினால் புலியைத் துரத் திய மறத்தி இருந்தனள் இன் னொரு ஊர்தியில்.

பட்டங்கள் பெற்றுச் சட் டங்கள் செய்து பாரினைப் பெண்கள் நடத்துவதாய் பாரதி கண்ட கனவை மெய்யாக்கிக் காட்டியது ஓர் ஊர்தி.

'பெண் குழந்தை பிறந்தால் கண்ணுள் வைத்துக் காப்பேன்' என்ற புரட்சிக் கவிஞரின் பாடல் அடிகளை வரவேற்பதுபோல் தமிழக அரசு அறிவித்துள்ள தொட்டில் குழந்தைகள் திட் டத்தை விளக்கியது அடுத்து வந்த அழகிய ஊர்தி.

காவிரியின் குறுக்கே கல் லணை கட்டிய கரிகால் வளவன்-

சிற்பக் கலைக்கோர் ஒப்பி லாக் கடல் மல்லையை உரு வாக்கிய மாமல்லன்-

அரிய வரலாற்றுச் சின்ன மாகத் தஞ்சையில் பெரிய கோயில் நிறுவிய இராசராசன்-

ஔவைக்கு நெல்லிக்கனி அளித்த அதியமான்-

பூங்கொடி முல்லைக்குப் பொற்றேர் அளித்த பாரி-

வாடும் மயிலுக்கு ஆடை கொடுத்த பேகன்-

காட்டிலும் கொடைத்திறம் காட்டிய குமணன்-

புறாவுக்கும் கருணை காட்டிய சிபி-

மகனையே தேர்க்காலில் இட்டு முறை செய்த மனுநீதிச் சோழன் என மங்காப் புகழ்பெற்ற மன் னர்கள் ஒவ்வொருவரும் ஒவ் வொரு அலங்கார ஊர்தியில் உயிரூட்டப்பட்டிருந்தார்கள்.

அவ்வாறான இரக்க மனம் மன்னர்களுக்கும் மக்களுக்கும் மட்டுமல்ல; மாக்களுக்கும் உண் டென்பதை விளக்குவதாகப் பாலை நிலத்தின் வெம்மைக் கொடுமை அடுத்ததோர் வண்டி யில் அணி செய்தது. தாகத்தால் அலைகிறது யானைக் கூட்டம்; ஓரிடத்தில் தேங்கியிருந்த சிறிது நீரைக் குட்டியானை மகிழ்ந்தாடி கலக்கி விடுகிறது. அந்நீரைத் தன் பிடி அருந்த மகிழ்கிறது ஆண் யானை. ஆண் மானொன்று, அருகே படுத்திருக்கும் பெண் மானுக்கு நின்றபடி நிழல் தருகிறது. கோடையால் வாடும் பெண் புறாவுக்குச் சிறகை விரித்து ஆண் புறா நிழல் கொடுக்கிறது. அற்புதமான காட்சிகளாக இவை இருந்தன.

ஆறைநகர் மன்னன் வான பூபதியிடம் பெரும் பரிசில் பெற்றுவரும் பாணனொருவன், தேர்மேல் வருகிறான் மன்னன் போல; அவனோர் வேந்தனோ என ஐயுறும் இன்னொரு பாவல னுக்கு அவன் தனக்குக் கொடை யளித்தவனின் பெருமை சொல்லி, நானும் உன்போல் பாணனே என ஆற்றுப்படுத்தும் காட்சி பிறிதொரு ஊர்தியில் பேரழ

கோடு தெரிந்தது.

புலவனொருவன் மன்னனிடம் யானை பரிசு பெற்று வருகிறான். "என்ன பரிசு?" என்று மனைவி கேட்க, களபம், மாதங்கம், வேழம், பகடு, கம்பமா என்றெல்லாம் அவனை இரட்டுற மொழியச் செய்து இன்புறும் மனைவியை இன்னொரு எழிலான வண்டி எடுத்துக் காட்டியது. இரட்டுற மொழிதல் என்பது தமிழுக்கு மட்டுமே உள்ள தனிச் சிறப்பு.

'பார்முழுதும் ஏர்முனையிலே' என்கிற ஏரெழுபது காட்சி-உரோமாபுரி மக்கள், கொற்கை முத்துகள் மீது கொள்ளைக் காதல் வைத்திருந்ததால், வளி தொழில் வாணிகம் வளர்த்த தமிழகக் காட்சி - ஆகியவை இரண்டு ஊர்திகளில் ஏற்றமுறக் காட்டப்பட்டிருந்தன.


வேழமுடைய சேரநாடு, சோற்றுப் பஞ்சமற்ற சோழநாடு, முத்துடைய தென்னாடு, சான்றோர் உடைய தொண்டை நாடு ஆகிய தமிழ்த் திருநாட்டின் தனிப் பெரும் சிறப்புகள் செம்மையுற அமைக்கப்பட்டிருந்தன ஓர் ஊர்தியில்.

புரட்சிக் கவிஞரின் பாடலடிகளை விளக்குவதாக விளங்கியது 'இனிய தமிழ் எனது உயிர்' என்னுமோர் ஊர்தி.

சூடிக்கொடுத்த சுடர்க்கொடி ஆண்டாள் - நக்கீரர் தமிழோடு விளையாடும் இறைவன் ஆகியோர் உருவம் இரண்டு வண்டிகளில் ஏற்றமுற அமைக்கப்பட்டிருந்தன.

வரையாது வழங்குவதே வாழ்வின் குறிக்கோள் என வாழ்ந்த வள்ளல் எம்.ஜி.ஆர். அவர்கள் கம்பீரமாகக் காட்சி தந்தார் ஓர் அலங்கார ஊர்தியில்.

வேறு மூன்று ஊர்திகளில் வீர மாமுனிவர், இராபர்ட்-டி-நொபிலி, கால்டுவெல், ஜியு.போப் ஆகிய அன்னைத் தமிழுக்குத் தொண்டாற்றிய ஐரோப்பியர்களும்-



ந.மு. வேங்கடசாமி நாட்டார், தவே. உமா மகேசுவரம் பிள்ளை, வ.உ. சிதம்பரம் பிள்ளை, உ.வே. சாமிநாதையர், திரு.வி.க., மறைமலை அடிகளார், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை ஆகிய இருபதாம் நூற்றாண்டுத் தமிழறிஞர்களும் அணி செய்தார்கள்.

'தமிழ்நாடு அரசு' எனப் பெயர் சூடிய அரசு தலைமைச் செயலகமும், கடமை கண்ணியம் கட்டுப்பாடு கற்பித்தவரும் பெற்றதாய் நாட்டுக்குப் பெயர் வைத்தவருமான அறிஞர் அண்ணா அவர்கள் உவகைபொங்க உருவாக்கப்பட்டிருந்தார் மற்றொரு ஊர்தியில்.

உலக நாகரிகங்கள் எல்லாவற்றுக்கும் தாயாக விளங்கும் சிந்து வெளிநாகரிகம் திராவிட நாகரிகமே என்பதைத் தெளிவுபடுத்தியது ஓர் ஊர்தி.

ஐம்பெரும் பூதங்களின் அடிப்படையை மக்கள் அறிந்திட வேண்டும் என்பதற்காகவே புவனம் முழுதும் சிவனின் நடனம் நிகழ்வது பிறிதொரு ஊர்தியில் கண் நிறைந்த காட்சியால் தெரிவிக்கப்பட்டிருந்தது.


அடுத்து வந்த அலங்கார வண்டியில், பாட்டுக்கொரு புலவன் பாரதியும் - வேற்றுமையில் ஒற்றுமைகாண அவனியற்றிய அரிய பாடல் காட்சிகளும் அழகு செய்தன.

தமிழ்த்தாயின் கைபிடித்துக் குறிபார்க்கும் குறவஞ்சி "பெண்ணுலகம் தனைக் காக்கும் பெருஞ்சிறப்புக் கரங்கள், புதுமை பலபுரியவந்த பொன் மகளின் கரங்கள், ஆளுமைத் திறத்துடனே அரவணைக்கும் கரங்கள்" என்று கூறும் இனிய காட்சி, ஊர்வலத்தின் முடிவாக வந்த அலங்கார வண்டியில் அற்புதமாகக் காட்டப்பட்டிருந்தது.


எத்திசையும் புகழ் மணக்கும் எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் தொடக்க விழா ஊர்வலத்தின் இடையிடையே கண்களுக்கும், காதுகளுக்கும் மட்டுமின்றி, கருத்துக்கும் விருந்தளிக்கும் கலை நிகழ்ச்சிகள் மாணவச் செல்வங்களின் அணிவகுப்புகள் சில இடம் பெற்றன. பழம் பெருமைமிக்க தமிழ்நாட்டின் கிராமப்புறக் கலை - இசை நிகழ்ச்சிகளும் அதிலுண்டு. அவற்றின் விவரம் வருமாறு:

மாநாட்டு இலச்சினை கொண்ட கொடியேந்தி வந்த மாணவியர் மாணவர்கள், தேசிய மாணவர் படை அணிவகுப்பு, சாரணர் அணிவகுப்பு, சாரணியர் அணிவகுப்பு, நாதசுரம், இன்னிசையோடு ஓதுவார் பண்ணிசை, கொம்பு முழக்கம், தாரை தப்பட்டை, நையாண்டி மேளம், பரத நாட்டியம், கோலாட்டம், கும்மி, மலைவாழ் மக்கள் நடனம், நாட்டுப்புறப் பாடல்கள், ஒயிலாட்டம், சேவையாட்டம், கள்ளழகர் ஆட்டம், கரகாட்டம், கவின்மிகு காவடியாட்டம், காளை ஆட்டம், பொய்க்கால் குதிரை, மயிலாட்டம், புலியாட்டம், வீர விளையாட்டுக்கள், கொக்கலிக் கட்டை ஆட்டம்...

என இவ்வாறாக எட்டாவது உலகத் தமிழ் மாநாடு முத்தமிழ்க் கலைக் காட்சிப் பேரணி நிகழ்வுற்றது; கண்டோர் மனமெல்லாம் மகிழ்வால் நிறைவுற்றது!



# இதயம் கொள்ளை கொண்ட - இணையற்ற வகையில் நடைபெற்ற எட்டாவது உலகத் தமிழ் மாநாடு




**எ**ட்டாவது உலகத் தமிழ் மாநாடு, தஞ்சாவூரில் சீரும் சிறப்புமாக நடைபெற்றது. 1995-ஆம் ஆண்டு ஜனவரி முதல் நாளிலிருந்து 5-ஆம் நாள் வரை (மார்கழித் திங்கள் 17-ஆம் நாள்) நடைபெற்ற இந்த மாபெரும் மாநாட்டை, மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் திரு கே.ஆர். நாராயணன் அவர்கள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையில் தொடங்கிவைத்தார்.

**சிலைகள் திறப்பு**

உலகளாவிய இம்மாநாட்டின் தொடக்க நாளான 1.1.95 அன்று காலை 9 மணியளவில் தஞ்சாவூர் புகைவண்டி நிலையச் சந்திப்பின் எதிரே, சுமார் 8 அடி உயரம் உள்ள டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவச் சிலையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் திறந்துவைத்தார்.

இவ்விழாவிற்கு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம்



அவர்கள் தலைமை தாங்கினார். விழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், வாரி யத் தலைவர்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் பங்கேற்றனர்.

ஏராளமான ஆண்களும், பெண்களும், முதியோரும், சிறுவர் சிறுமியரும் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தார்கள்.

பின்னர், 15 அடி உயர இராசராச சோழன் சிலையை, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தலைமையில், மாண்புமிகு மலேசிய அமைச்சர் திரு. டத்தோ சாமிவேலு அவர்கள் திறந்துவைத்தார். இராசராச சோழன் மணிமண்டபம், தொல்காப்பியர் நினைவுக் கோபுரம் ஆகியவைகளும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களால் அன்றே திறந்து வைக்கப்பட்டன.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக வளாகத்தில் தெய்வப் புலவர் திருவள்ளுவர் சிலையைத் திறந்துவைத்து, அதன்பின் 63 அரிய தமிழ்ப் புத்தகங்களையும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாபெரும் மக்கள் கூட்டத்தில் மகிழ்ச்சி ஆரவாரத்திற்கிடையே வெளியிட்டார்.


**தியாகிகள் குடும்பத்திற்கான நிதியுதவி**

இராசராச சோழன் மணிமண்டபத் திறப்பு விழாவில் பங்கேற்ற மாண்புமிகு முதலமைச்சர் **அவர்கள்,** பல்வேறு காலகட்டங்களில் தமிழ்நாட்டில் நடைபெற்ற போராட்டங்களில் ஈடுபட்டு, தமிழ் காக்கத் தம் இன்னுயிரீந்த 12 தியாகச் செம்மல்களின் குடும்பத்தாருக்கு நிதியுதவி அளித்துச் சிறப்பித்தார்.

ஒவ்வொரு குடும்பத்தார்க்கும் ரூ.50 ஆயிரம் வீதம் நிதி வழங்கப்பட்டது.

மொழிப் போரில் உயிர்நீத்த தியாகிகள் விவரம் வருமாறு:

அ. மயிலாடுதுறை சாரங்கபாணி, ஆ. விராலிமலை சண்முகம், இ. கீரனூர் முத்து, ஈ. ஐயம்பாளையம் வீரப்பன் உ. சத்திய மங்கலம் வீரப்பன், ஊ. பீளமேடு தண்டபாணி, எ. விருகம்பாக்கம் அரங்கநாதன், ஏ. கோடம்பாக்கம் சிவலிங்கம், ஐ. கீழப்பழுவூர் சிவலிங்கம், ஒ. தளபதி இராசேந்திரன், ஓ. தாளமுத்து, ஔ. நடராசன்.



### நுழைவு வாயில்கள்

உலகத் தமிழ் மாநாடு நடைபெறும் தஞ்சைக்கு வரும் 7 முக்கியச் சாலைகளில் பிரம்மாண்டமான அளவில் நிரந்தரமான அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டிருந்தன.

திருவையாறு சாலையில் கபிலர் தோரணவாயில், கும்பகோணம் சாலையில் அதியமான் தோரணவாயில், நாகப்பட்டினம் சாலையில் குந்தவை தேவியார் தோரண வாயில், பட்டுக்கோட்டை சாலையில் கரிகாற்சோழன் தோரணவாயில், புதுக் கோட்டை சாலையில் வேலுநாச்சியார் தோரணவாயில், திருச்சிராப்பள்ளி சாலையில் இராசராச சோழன் தோரணவாயில், பிள்ளையார்ப்பட்டி சாலையில் சேரன் செங்குட்டுவன் தோரணவாயில், என அமைக்கப்பட்டிருந்த எழில்மிகு நுழைவு வாயில்களும் மாண்புமிகு முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டன.



### ஊர்வலச் சிறப்பு

மாண்புமிகு முதல்வர் அவர்கள், தஞ்சையில் உள்ள பழைய பேருந்து நிலையத்தின் எதிரே அமைக்கப்பட்டிருந்த அலங்கார மேடைக்கு, அன்று காலை **9.30** மணியளவில் வந்து சேர்ந்தார்.

எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டை யொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மிகப் பெரிய ஊர்வலத்தை அவர் அங்கிருந்து கண்டு ரசித்தார்.

அம்மேடையில்— உலகத் தமிழ் மாநாட்டுக்கு வருகை தந்திருந்த மாண்புமிகு பிறநாட்டு அமைச்சர்கள், வெளிநாட்டுப் பேராளர்கள், முன்னாள் புதுவை முதல்வர், மாண்புமிகு தமிழக அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு முதல்வர் அவர்களின் தோழி திருமதி சசிகலா ஆகியோரும், வாரியத் தலைவர்களும், அரசு தலைமைச் செயலாளரும் வீற்றிருந்தார்கள்.

**54** அலங்கார வண்டிகளும், **27** கலை நிகழ்ச்சிக் குழுக்களும் இடம் பெற்றிருந்த அந்த ஊர்வலத்தில் வந்த மாணவ மாணவிகளின் **9** குழுவினர் ஆடிய நடனங்களுக்கு, நயம் மிகுந்த தமிழ்ப் பாடல்கள் ஒன்பதைப் புலவர் புலமைப்பித்தன் அவர்கள் எழுதியிருந்தார்.

பல இலக்கியக் காட்சிகளை விளக்குவதாக அமைக்கப்பட்டிருந்த அந்த ஊர்வலம், ஓரிடத்தைக் கடக்க, ஏறத்தாழ நான்கு மணி நேரம் பிடித்தது. ஊர்வலத்தைப் பல்லாயிரக் கணக்கான மக்கள் கண்டுகளித்தார்கள்.

### நேர்முக வர்ணனை

ஊர்வலச் சிறப்புப் பற்றிய நேர்முக வர்ணனை— கவிஞர் இளந்தேவன், திருமதி ஜெனிஃபர் அருள், டாக்டர் சுதா சேஷய்யன், திரு சுமந்த்ராமன், பேராசிரியர் அ.வெ. இராசகோபாலன், டாக்டர் இரா. செல்வக் கணபதி ஆகியோரால் திறம்படச் செய்யப் பட்டன.

### மாநாட்டுத் தொடக்க விழா

**1.1.1995** அன்று மாலை **4** மணி அளவில் தஞ்சாவூரில் உள்ள அன்னை சத்யா விளையாட்டு அரங்கத்தில், '21ஆம் நூற்றாண்டிற்குத் தமிழ்ப் பண்பாட்டின் நன்கொடை' **(Contribution of Tamil Culture to the 21st Century)** என்கிற குறிக்கோள் கொண்டு நடத்தப்படும் எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் தொடக்க விழா இனிதே நடைபெற்றது. விழாத் தொடக்கத்தில், எம்.பி.என். பொன்னுசாமி- சேதுராமன் சகோதரர்களின் நாதசுர இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட இந்த விழாவுக்கு, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா



அவர்கள் தலைமை தாங்கினார்.

மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் திரு கே.ஆர். நாராயணன் அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்த இவ்விழாவில், மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் வரவேற் புரையாற்றினார்.

அடுத்து எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் நோக்கம், சிறப்பு ஆகியவை பற்றி, உலகத் தமிழாராய்ச்சிக் கழகத் தலைவர் நொபொரு கரஷிமா அவர்கள் உரை நிகழ்த்தினார்.

முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்த இவ்விழாவில் மாண்புமிகு மொரீசியஸ் அமைச்சர் திரு ஆறுமுகம் பரசுராமன், மாண்புமிகு இலங்கை அமைச்சர் திரு எஸ். தொண்டமான், மாண்புமிகு மலேசிய அமைச்சர் டத்தோ எஸ். சாமிவேலு, மாண்புமிகு இந்திய அரசு நலத்துறை இணை அமைச்சர் திரு கே.வி. தங்கபாலு, முன்னாள் கேர ஆளுநர் திரு பா. இராமச்சந்திரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மாநாட்டுத் தலை மையுரையாற்றினார்.

**மலர்கள் வெளியீடு**

இவ்விழாவில், மொரீசியஸ் தீவில் 1989-இல் நடைபெற்ற ஏழாவது உலகத் தமிழ் மாநாட்டு மலரை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார். முதல் மலரை, உலகத் தமிழாராய்ச்சி நிறு வனத் தலைவர் திரு நொபொரு கரஷிமா அவர்கள் பெற்றுக்கொண்டார்.

எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டுப் பொது மலரை மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் திரு கே.ஆர். நாராயணன் அவர்கள் வெளியிட்டார். முதல் மலரை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பெற்றுக்கொண்டார்.

மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் அவர்களே எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டு அறிவியல் மலரையும், எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டு மாணவர் மலரையும் அடுத்தடுத்து வெளியிட்டார். அவற்றை முறையே மாண்புமிகு மலேசிய அமைச்சர் திரு டத்தோ எஸ். சாமிவேலு அவர்களும், மாண்புமிகு மொரீசியஸ் அமைச்சர் திரு ஆறுமுகம் பரசுராமன் அவர்களும் பெற்றுக் கொண்டார்கள்.

**தொடக்க விழாப் பேருரை**

மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் திரு கே.ஆர். நாராயணன் அவர்கள்





குத்துவிளக்கு ஏற்றி வைத்து, வரலாற்றுப் புகழ்மிக்க எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் தொடக்க உரையாற்றினார்.

முடிவில், மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் திரு கே.ஆர். நாராயணன் அவர்களுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நினைவுப் பரிசு வழங்கி மகிழ்ந்தார்.

கடைசியாக, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் நன்றியுரையாற்றினார்.

இவ்விழாவில், மாண்புமிகு தமிழக அமைச்சர் பெருமக்களும், அயல்நாட்டுப் பேராளர்களும், இலட்சக்கணக்கான பொது மக்களும் கலந்துகொண்டு, களிப்புற்றார்கள்.

இம் மாநாட்டையொட்டித் தஞ்சைத் தரணியே திருவிழாக் கோலம் பூண்டிருந்தது.

**இலக்கியச் சோலை**

மாலை 7 மணியளவில், தஞ்சையில் உள்ள காவலர் அணிவகுப்புத் திடலில் நடைபெற்ற விழாவொன்றில்- 'இலக்கியச் சோலை' என்ற அரசு தயாரித்த, தமிழ் மணக்கும் அருமையான திரைப்படமொன்றை வெளியிட்டார், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள். ஆர்.வி. உதயக்குமார் அவர்கள் இயக்கத்தில் உருவாக்கப்பட்டிருந்த அத் திரைப்படச் சுருளை, மாண்புமிகு செய்தி விளம்பரத் துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

அ. புறநானூற்றுத் தாயின் வீரம், ஆ. கரிகாற்சோழன் வழங்கிய நீதி, இ. கவரி வீசிய காவலன், ஈ. சிற்றுயிர்க்கும் கருணை காட்டிய மன்னன், உ. நந்திவர்மப் பல்லவனின் செந்தமிழ் பக்தி, ஊ. இராசராசனின் அரசியல் மாட்சி ஆகிய ஆறு இலக்கியக் காட்சிகளுக்கான அற்புதமான அப்படத்தின் திரைக்கதை வசனம் பாடல்களைப் புலவர் புலமைப்பித்தன் அவர்கள் எழுதியிருந்தார்.

தமிழ்த் திரைவானில் புகழ்மிக்க நட்சத்திரங்கள் மின்னிய அப்படத்தைச் செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு தி. சண்முகராஜேசுவரன் அவர்கள், அரசு சார்பில் தயாரித்திருந்தார்.

**கலை நிகழ்ச்சிகள்**

காவலர் அணிவகுப்புத் திடலில் 'இலக்கியச் சோலை' வெளியீட்டு விழாவைத் தொடர்ந்து– டாக்டர் பத்மா சுப்பிரமணியம் அவர்களின் 'பண்ணும் பரதமும்' நாட்டிய நாடகம் நடைபெற்றது.

அதன்பின், திரு குன்னக்குடி வைத்தியநாதன் அவர்களின் வயலின் இசை தொடர்ந்தது.

அதேபோல- அதே நேரத்தில், தஞ்சைத் திலகர் திடலில், மலேசிய நாடாளுமன்ற உறுப்பினர் டத்தோ எம். குமரன் அவர்கள் தலைமையில் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு. எம். ஆனந்தன் அவர்கள் முன்னிலையில் திரு சிட்டிபாபு அவர்களின் வீணை இசை நிகழ்ச்சி நடை பெற்றது.

அதன்பிறகு, அரசு தலைமைச் செயலக நாடகக் குழுவினரின் 'தமிழ் காத்த தலைவன்' நாடகம் நடத்தப்பெற்றது.

இதே நேரத்தில், இராசராசன் மணி மண்டப இசையரங்கில் செல்வி சௌமியா வின் இசை நிகழ்ச்சியும், செல்வியர் லலிதா நந்தினி வயலின் இசை நிகழ்ச்சியும், திரு துர்கா பிரசாத் கோட்டுவாத்திய இசை நிகழ்ச்சியும் நடைபெற்றது.

**தமிழாய்வு அமர்வுகள்**

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின், மாநாட்டுத் தமிழ்ப் பணியாக, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் தலைவர் திரு நொபொரு கரஷிமா அவர்கள் தலைமையில் நடைபெற்ற தமிழாய்வுக்கான 10-க்கும் மேலான அமர்வுகளில் தமிழறிஞர் பலரும் பங்கேற்றனர். தனித்தனி பெரும் அறைகளில், இந்த அமர்வுகள் நடைபெற்றன.

**அறிவிப்புப் பலகைகள்**

தஞ்சைப் பெரிய கோயில் நாட்டிய அரங்கத்தில் அதே போல் அன்றிரவு 8 மணி முதல், செல்வி சுதாவின் குச்சுப்புடி நாட்டிய நிகழ்ச்சியும், திருமதி சந்திரா தண்டாயுத பாணியின் நாட்டிய நாடகமும், செல்வி மதுமதி சண்முகசுந்தரத்தின் நடன நிகழ்ச்சியும் அடுத்தடுத்து நடைபெற்றன.

கலியாணசுந்தரனார் நினைவுப் பள்ளியில் அன்றிரவே, செல்வி பிரியா சுந்தரேசனின் நாட்டியமும், ஐ.என்.ஏ. தியேட்டர்சாரின் 'தர்மயுத்தம்' நாடகமும் நடைபெற்றன.

எந்தெந்தக் கலையரங்கில், எத்தனை மணிக்கு என்னென்ன கலைநிகழ்ச்சி நடை பெறுகிறது என்பதை அறிய, முக்கிய வீதி களிளெல்லாம் அறிவிப்புப் பலகைகள் மிகத் தெளிவாகப் போடப்பட்டிருந்தன.

கலை வளர்த்த சோழ மண்ணில், இவ்வாறு பரவலாக நடைபெற்ற பல கலை நிகழ்ச்சிகளைக் காண, இரவெல்லாம் மக்கள் வெள்ளம் குடும்பம் குடும்பமாக அலை மோதிக் கொண்டிருப்பதைக் காண முடிந்தது.





# உலகத் தமிழ் மாநாடு: இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள்

எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் முதல்நாள் நிகழ்ச்சிகளால், 'என்னருந் தமிழ்நாட்டின் கண் எல்லாரும் இன்புற்றிருந் தார்'!



தஞ்சாவூரில், இரண்டாம் நாள் நிகழ்ச் சிகள் 2.1.1995 அன்று காலை மகிழ்ச்சி பொங்கத் தொடங்கின. காவலர் அணி வகுப்புத் திடலில், இராசராசன் மணிமண்ட பத்தில், பெரியகோயில் நாட்டிய அரங்கத்தில், கலியாண சுந்தரனார் நினைவுப் பள்ளியில், திலகர் திடலில் என எங்கு பார்த்தாலும் 'வெள்ளம்போல் தமிழர் கூட்டம் வீரங்கொள் கூட்டம்' எதைப் பார்ப்பது, எதைத் தவிர்ப்பது என்ற தவிப்போடு அலைமோதிக் கொண்டி ருந்தது.

**தமிழ்ப் பல்கலைக் கழகம்**

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற பலவகைத் தலைப்புகளின் கீழான ஆய்வுகள் பற்றிய அமர்வுகளைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் ஔவை நடராசன் அவர்கள் முறைப்படுத் தினார்.



உலகத் தமிழாராய்ச்சி மன்றத் தலைவர் திரு நொபொரு கரஷிமா அவர்கள் ஆய் வரங்கை வழிநடத்தினார்.

**காவலர் அணிவகுப்புத் திடல்**

பொது அரங்க நிகழ்ச்சிகள் மற்றும் கலைநிகழ்ச்சிகள், காவலர் அணிவகுப்புத் திடலில் காலை 9 மணியளவில் கலைமாமணி டாக்டர் சீர்காழி சிவசிதம்பரம் குழுவினர் இன்னிசையோடு தொடங்கியது.

தம்முடைய நிகழ்ச்சியின் கடைசிப் பாடலை—

'ஆறிரு தடந்தோள் வாழ்க,
ஆறுமுகம் வாழ்க, வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க...'

—என்று இசைநயம் பொங்கப் பாடிக் கொண்டேபோய்,

'இனியஎம் தமிழ்த்தாய் வாழ்க
எட்டாம் உலகத் தமிழ்மாநாடு வாழ்க'


—என்று அனைவரும் மகிழ்ந்திட மாற்றிப் பாடி முடித்தார் அவர்.

**தமிழ்மொழி உயர்வு**

அதைத் தொடர்ந்து 'தமிழ்மொழி உயர்வு' என்ற பொருளின் அடிப்படையில் வாழ்த் தரங்கம் தொடங்கியது.

இந்நிகழ்ச்சியில், முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் தொடக்கவுரையாற்றினார்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு சு. முத்துசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் மாண்புமிகு இலங்கை கால்நடை வளர்ச்சி மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு எஸ். தொண்டமான், முன்னாள் கேரள மாநில ஆளுநர் திரு பா. இராமச்சந்திரன், தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர் கட்சியின் பொதுச் செயலாளர் திரு பொன். குமார், இந்திய உழவர் உழைப்பாளர் கட்சித் தலைவர் திரு கே. செல்லமுத்து, வன்னியகுல



## ஒரு ரூபாய் விலையில் உணவுப் பொட்டலம்!

உலகத் தமிழ் மாநாட்டுக்கு வந்த பொதுமக்களுக்கு, ஒரு ரூபாய் விலையில் உணவுப் பொட்டலம் வழங்கப்பட்டது. இதற்கான மையங்கள் ஆங்காங்கே திறக்கப்பட்டிருந்தன. இந்த மையங்களில் காலையிலிருந்தே மக்கள் வரிசையாக நின்றிருந்தனர்.

மலிவு விலை உணவான எலுமிச்சை, புளியோதரை, தயிர்ச் சாதம் ஆகியவை சுவையுடன் இருந்ததே இந்தப் பெருங் கூட்டத்துக்குக் காரணம்.

ரூ.4.50 விலை மதிக்கத்தக்க இந்த உணவுப் பொட்டலம் மற்றும் தண்ணீர்ப் பாக்கெட்டு ஒரு ரூபாய்க்குத் தரப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

தரமான – அதேசமயத்தில் சுவையான உணவு என்றால் யார்தான் வரமாட்டார்கள்? காரில் போவோர் கூட இந்த உணவுப் பொட்டலங்களைக் காத்திருந்து வாங்கிச் சென்றதைப் பார்க்க முடிந்தது.

மலிவு விலையில் விற்கப்பட்ட இந்த உணவு எல்லாருக்கும் மனநிறைவைத் தந்தது என்பது உண்மையாகும்.

க்ஷத்திரிய நல அமைப்புகளின் மத்திய மையத் தலைவர் திரு இரா. குலசேகரன், மலேசியாவைச் சேர்ந்த திருமதி டத்தோ இந்திராணி சாமிவேலு, தமிழ்நாடு சட்டப்பேரவை உறுப்பினர் திரு எஸ்.வி. சண்முகம், அனைத்திந்தியப் பார்வர்டு பிளாக் கட்சியின் பொதுச் செயலாளர் திரு எஸ். ஆண்டித் தேவர், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் பொதுச் செயலாளர் திரு அ.க.அ. அப்துல்சமது ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

அனைவருக்கும் விழாத் தலைவர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு சு. முத்துசாமி அவர்கள் பொன்னாடை போர்த்தினார்.

மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் நினைவுப் பரிசுகள் அளித்தார்.

நண்பகல் 1 மணியளவில் இந்நிகழ்ச்சி நிறைவடைந்தது.

**கவியரங்கம்**

அதே அலங்காரப் பந்தலில் மாலை 4 மணியளவில் கவியரங்க நிகழ்ச்சி கவினுறத் தொடங்கியது.

'இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்கள்' என்னும் தலைப்பில் நடைபெற்ற இந்தக் கவியரங்கம், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு கு.ப. கிருஷ்ணன் அவர்கள் தொடங்கி வைத்த இந்தக் கவியரங்கத்திற்குப் புலவர் புலமைப்பித்தன் அவர்கள் தலைமை தாங்கினார்.

இக்கவியரங்கில் கவிஞர் மு. மேத்தா அவர்கள் 'புதுமைக் கவிஞர் பாரதியார்' என்ற தலைப்பிலும், கவிஞர் கலிபூங்குன்றன் அவர்கள் 'புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்' என்ற தலைப்பிலும், கவிஞர் குருவிக்கரம்பை சண்முகம் அவர்கள் 'கவிஞர் தேசிக விநாயகம்' என்ற தலைப்பிலும், கவிஞர் பொன்னடியான் அவர்கள் 'தேசியக் கவிஞர் நாமக்கல் இராமலிங்கம்' என்ற தலைப்பிலும், கவிஞர் முத்துலிங்கம் அவர்கள் 'பட்டுக்கோட்டை கலியாணசுந்தரம்' என்ற தலைப்பிலும், கவிஞர் பெரி சிவனடியான் அவர்கள் 'கவியரசு கண்ணதாசன்' என்ற தலைப்பிலும் கரும்புநிகர் கவிபாடினர்.

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களும், கவிஞர்களுக்கெல்லாம் பொன்னாடை அணிவித்து நினைவுப் பரிசு வழங்கினார்கள்.

**கருத்தரங்கம்**

காவலர் அணிவகுப்புத் திடலில் மாலை 7 மணியளவில் கருத்தரங்கம் தொடங்கியது.

'பண்டைய இலக்கியம்' என்கிற தலைப்பிலான இக்கருத்தரங்கில், மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் தொடக்கவுரையாற்றினார்.

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்

திரு டி.எம். செல்வகணபதி அவர்கள் முன்னிலையில் இந்தக் கருத்தரங்கம், மாண்புமிகு மலேசிய எரிசக்தி அஞ்சல்துறை அமைச்சர் திரு டத்தோ எஸ். சாமிவேலு அவர்கள் தலைமையில் சிறப்புற நடை பெற்றது.

இக்கருத்தரங்கத்தில் தொல்காப்பியத்தில் வாழ்வியல்நெறி என்ற தலைப்பில் பாவலர் பாலசுந்தரம் அவர்களும், 'திருக்குறளில் அறநெறி' எனுந்தலைப்பில் முனைவர் பழனி அரங்கசாமி அவர்களும், புறநானூற்றில் பண்பாடு' என்ற தலைப்பில் முனைவர் சி. பாலசுப்பிரமணியம் அவர்களும், 'அக நானூற்றில் காதல்' என்ற தலைப்பில் முனைவர் சாரதா நம்பி ஆரூரன் அவர்களும், 'பத்துப்பாட்டில் வீரம்' என்ற தலைப்பில் முனைவர் சிற்பி பாலசுப்பிரமணியம் அவர் களும் சொற்பொழிவு நிகழ்த்தினர்.

கருத்தரங்கின் முடிவில் மாண்புமிகு டத்தோ எஸ். சாமிவேலு அவர்கள் நிறை வுறையாற்றினார்.

**கலை நிகழ்ச்சிகள்**

இரவு 9 மணியளவில் காவலர் அணி வகுப்புத் திடலில், மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு. துரை இராம சாமி அவர்கள் தலைமையிலும், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு டி.வி. நடேசன் பால்ராஜ் அவர்கள் முன்னி லையிலும் கலைநிகழ்ச்சிகள் தொடங்கின.

முதல் நிகழ்ச்சியாகத் திருமதி சுதா ரகுநாதன் அவர்களின் இன்னிசை நிகழ்ச்சி 'பாலும் தெளிதேனும்...' பாடலோடு தொடங் கியது.

இரவு 10 மணியளவில் முனைவர் விசய லக்குமி நவநீத கிருட்டிணன் அவர்களின் நாட்டுப்புறப் பாடல்கள் நிகழ்ச்சி தொடங் கியது.

**இராசராசன் மணிமண்டபம்**

இராசராசன் மணிமண்டபத்தில், காலை 10 மணி முதல் இரவு 10 மணி வரை இசை அரங்கம் தொடர்ந்தது.

திரு ஆத்மநாதன், திரு குலமங்கலம் முரளி, திரு அசோக்ரமணி ஆகியோரின் இன்னிசை நிகழ்ச்சிகளும் சிக்கல் சகோதரர்களின் புல்லாங்குழல் இசை நிகழ்ச்சியும், திரு சிட்டி பாபு அவர்களின் வீணை இசை நிகழ்ச்சியும் வகையுற வரிசைபட நடைபெற்றது.

**பெரியகோயில்**

தஞ்சைப் பெரியகோயிலில் உள்ள நாட்டிய அரங்கத்தில் செல்வி லட்சுமி பிரியா, செல்வியர் லாவண்யா லாசியா, திரு நரசிம்மாச்சாரி திருமதி மீனாட்சி சித்த ரஞ்சன், திருமதி இந்திராராஜன் ஆகியோரின் நடன நிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக உவகையூட்டும் விதத்தில் நடைபெற்றன.

**கலியாணசுந்தரனார் நினைவுப் பள்ளி**

கலியாணசுந்தரனார் நினைவுப் பள்ளியில் செல்வி ஹேமா பால் நாட்டியமும், செல்வி கவிதாராமு, திருமதி கே.ஜே. சரசா

## எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் 32 நாடுகளைச் சேர்ந்த 1,135 அறிஞர்கள் பங்கேற்பு!

**எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் 31 நாடுகளைச் சேர்ந்த 478 தமிழறிஞர்கள் பேராளர்களாகவும் பார்வை யாளர்களாகவும் பங்கு பெறு கின்றனர். அதன் விவரம் வரு மாறு:**

| நாடு | பங்கு பெறும் பார்வையாளர்கள் மற்றும் பேராளர்களது எண்ணிக்கை: |
|---|---|
| ஆஸ்திரேலியா | 14 |
| புருனை | 1 |
| கனடா | 4 |
| சீனா | 1 |
| செக் | 1 |
| பின்லாந்து | 1 |
| பிரான்சு | 3 |
| ஜெர்மனி | 7 |
| ஹாலந்து | 2 |
| ஹாங்காங் | 3 |
| இந்தோனேஷியா | 3 |
| இத்தாலி | 2 |
| ஜப்பான் | 13 |
| மா | 1 |
| மலேஷியா | 281 |
| மொரிஷியஸ் | 16 |
| நெதர்லாந்து | 3 |
| ஓமன் | 3 |
| பிலிப்பைன்ஸ் | 3 |
| ரியூனியன் | 5 |
| ரஷியா | 2 |
| சவூதி அரேபியா | 1 |
| செய்செல்லஸ் | 4 |
| சிங்கப்பூர் | 43 |
| தெற்கு ஆப்பிரிக்கா | 16 |
| இலங்கை | 6 |
| ஸ்வீடன் | 5 |
| தாய்லாந்து | 1 |
| துருக்கி | 2 |
| அமெரிக்கா | 24 |
| இங்கிலாந்து | 7 |

ஆகியோரின் நாட்டிய நாடகங்களும், திரு புதுவை முகுந்தனின் 'அன்பு இல்லம்' நாடகமும் அழகுடன் அடுத்தடுத்து நடத்தப் பட்டன.

### திலகர் திடல்

திலகர் திடலில், மாலை 6 மணியளவில் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு எம். சின்னசாமி அவர்கள் தலைமையில், மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு டி. ஜனார்த்தனன் அவர்கள் முன்னிலையில் திரு ந.மா. முத்துக்கூத்தன் அவர்களின் பொம்மலாட்ட நிகழ்ச்சி நடைபெற்றது.

அதனையடுத்து, திரு குன்னக்குடி வைத்தியநாதன் அவர்களின் வயலின் இசை நிகழ்ச்சி இனிதே தொடர்ந்தது.

அதன்பின், திருமதி கோமளா வரதன் அவர்களின் நாட்டிய நிகழ்ச்சியும் திரு டி.கே. எஸ். நாடக மன்றத்தாரின் 'ராஜராஜசோழன்' நாடகமும் அற்புதமாக நடைபெற்றன.

### பல்கலைக்கழக அரங்கு

தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் மாலை 6 மணியளவில் முனைவர் இராமானுசம் அவர்களின் பரிசார்த்த நாடகம் நடைபெற்றது.

அதைத் தொடர்ந்து திரு டி. சங்கரமூர்த்தி அவர்களின் 'பஞ்சமுக வாத்திய' இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

கடைசியாகத் திரு மோசஸ் திலக் அவர்களின் களரிப் பயிற்று நிகழ்ச்சி இடம் பெற்றது.

இவையாவும் பிறநாட்டுப் பேராளர்களும் பெருவியப்போடு கண்டு மகிழும் வண்ணம் தக்க விளக்கங்களோடும் விறுவிறுப்போடும் நடத்தப்பட்டன.

### அறிவிப்பாளர்கள்

எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டுக் கலை நிகழ்ச்சிகள் தஞ்சை மாநகரெங்கும் பரவலாக நடத்தப்பட்டன. அந்நகரின் 10 முக்கிய வீதிச் சந்திப்புகளிலெல்லாம் தஞ்சாவூர் தாடி ராவ், மதுரை மாரிமுத்து போன்றவர்களுடைய புகழ்மிக்க கலைக்குழுக்களின் மூலம் கிரா மியக் கலை நிகழ்ச்சிகள் நாள்தோறும் மாலை வேளைகளில் நயம்பட நடத்தப்பட்டன.

அவைதவிர, குறிப்பிட்ட அரங்கங்களில் நடத்தப்பட்ட கலை நிகழ்ச்சிகளுக்கு அரசு மூலமே அறிவிப்பாளர்கள் நியமிக்கப்பட்டி ருந்தார்கள்.

திலகர் திடலில், கலை நிகழ்ச்சிகளுக்கு செல்வி விசாலி கண்ணதாசன் அவர்கள் அறி விப்பாளராக இருந்தார்.

கலியாணசுந்தரனார் நினைவுப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சிகளுக்குத் திருமதி ரேவதி அவர்களும், புலவர் கோம்திநாயகம் அவர் களும் அறிவிப்பாளர்களாக அமர்த்தப் பட்டிருந்தனர்.

தஞ்சைப் பெரிய கோயில் நாட்டிய அரங் கத்தில் நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளின் அறிவிப்பாளராகக் கலைமாமணி சரசுவதி சுந்தரேசன் அவர்கள் பணியாற்றினார்.

காவலர் திடல் நிகழ்ச்சிகளின் அறிவிப்பாளராக இருந்து திறம்பட நடத்தினார் திருமதி கிரிஜா ராகவன் அவர்கள்.

## ஊரும் பேரும்

### ஒரத்தநாடு

'ஒருத்தி நாடு' என்பதன் மருவுச் சொல்தான் ஒரத்த நாடு என்று அறியப்படுகிறது.

### பட்டுக்கோட்டை

'பட்டு மழவராயர்' எனும் குறுநில மன்னன் கோட்டை கட்டி ஆட்சிபுரிந்தமையால் பட்டுக்கோட்டை என வழங்கு வதாகவும் கூறப்படுகிறது.

### திருத்துறைப்பூண்டி

இவ்விடத்திற்குத் திருத்தருப் பூண்டி, நவதீர்த்தபுரம் என்ற வேறு இரு பெயர்களும் உண்டு.

### வலங்கைமான்

நடனமாடும் கூத்தன் சிவ பெருமான், வலக்கையால் மான் ஏந்தியுள்ளதால் வலங் கைமான் எனும் பெயர் வந்த தெனக் கூறுகின்றனர்.

### பாபநாசம்

முனிவரின் பாபத்தை இறைவன் நாசம் செய்த ஸ்தலமாகையால், பாபநாசம் எனப் புராணக்கதை மூலம் அறியப்படுகிறது.

### திருவையாறு

ஐந்து பெரும் ஆறுகளை உடைய ஊர் என்பதே திருஜயாறு என வழங்குகிறது.

(மணிமேகலைப் பிரசுரத்தின் 'தஞ்சாவூர் மாவட்டம்' எனும் நூலிலிருந்து.)



# உலகத் தமிழ் மாநாடு: மூன்றாம் நாள் நிகழ்ச்சிகள்

**எ**ட்டாவது உலகத் தமிழ் மாநாட்டைக் கண்டுகளிக்க, தென்னாட்டார் மட்டுமல்ல, பிற மாநிலத்தவர்களும், ஏராளமான வெளி நாட்டவரும்கூட, தஞ்சைத் தரணிக்கு வருகை தந்திருந்தார்கள்.



ஓட்டல் தமிழ்நாடு, நெடுஞ்சாலைப் பயணியர் மாளிகை, அரசர் வழித்தங்கல் மனை, புதிய வீட்டு வசதி வாரியம், தமிழ்ப் பல்கலைக் கழக வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு, ஓரியண்டல் டவர்ஸ், சங்கு சக்கர விடுதி, டெம்பிள் டவர் விடுதி, பரிசுத்தம், தனியார் விடுதிகள், மருத்துவக் கல்லூரி விடுதி, திருமண மண்டபங்கள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் விடுதிகள் போன்றவற்றில் அவர்களெல்லாம் தங்குவதற்கு முறைப்படி வசதி செய்து தரப்பட்டிருந்தது.

**தகவல் மையங்கள்**

எங்கெங்கே என்னென்ன நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன என்பதை அவ்வப்பகுதி மக்கள் அறிந்திட - தஞ்சை மாநகரின் முக்கிய இடங்கள் 12-இல் தகவல் மையங்கள் அமைக்



கப்பட்டிருந்தன.

**உணவு வழங்கல்**

தஞ்சைக்குக் குடும்பம் குடும்பமாகத் திரண்டு வந்த இலட்சோப இலட்சம் மக்களுக்கு 36 இடங்களில் உணவுப் பொட்டலங்கள் தட்டுப்பாடின்றி வழங்கப்பட்டன.

300 கிராம் அளவில் - புளிசாதம், எலுமிச்சை சாதம், தயிர் சாதம், பூரி பொட்டலம் என அவை பக்குவமாக ஆங்காங்கே வழங்கப்பட்டன. தண்ணீர் பாக்கெட்டுகள் இலவசமாக அளிக்கப்பட்டன.

அவற்றைத் தயாரிப்பதற்கான சமையற் கூடங்கள், தஞ்சையில் ஏழு இடங்களில் அமைக்கப்பட்டிருந்தன.

**காவலர் அணிவகுப்புத் திடல்**

80 x 120 அடி நீள அகலம் கொண்டதாகப் பிரம்மாண்டமான அளவில் அமைக்கப் பட்டிருந்தது காவலர் அணிவகுப்புத் திடல் அலங்காரப் பந்தல்; அங்கே 3.1.95 அன்று, உலகத் தமிழ் மாநாட்டின் மூன்றாம் நாளில் தொடங்கிய நிகழ்ச்சிகளுக்குக் கூட்டம் அதிகாலை முதலே நிரம்பி வழிந்தது.


டி.கே.எஸ். கலைவாணன் அவர்களின் இன்னிசையோடு காலை நிகழ்ச்சிகள் தொடங்கின.

**ஆட்சி மொழி**

மாநாட்டின் முதல் நிகழ்ச்சியாக 'ஆட்சி மொழி' என்ற தலைப்பின் கீழான கருத்தரங்கம் தொடங்கியது; மாண்புமிகு தமிழ்நாடு அரசு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்கள் தலைமை தாங்கினார்.

மாண்புமிகு மலேசிய அமைச்சர் திரு டத்தோ ஜி. வடிவேலு அவர்கள் முன்னிலையில் இந்நிகழ்ச்சி மிகச் சிறப்பாக நடைபெற்றது.

மாண்புமிகு கல்வி அமைச்சரின் தலைமை உரை, திரு டத்தோ ஜி. வடிவேலு அவர்கள் முன்னுரை ஆகியவற்றைத் தொடர்ந்து - காவல் துறை இயக்குநர் திரு எஸ். ஸ்ரீபால், மாநிலத் தேர்தல் ஆணையாளர் திரு. கே. மலைச்சாமி அவர்களும், மட்டக்களப்பைச் சேர்ந்த திரு ஜோசப் பரராசசிங்கம் அவர்களும், மாண்புமிகு இலங்கைத் துணை அமைச்சர் திரு டத்தோ எம். மகாலிங்கம் அவர்களும் பங்கேற்று மிகச் சிறப்பான பொருள் பொதிந்த சொற்பொழிவை நிகழ்த்தினார்கள்.



கருத்தரங்கின் முடிவில் - அதில் பங்கேற்று உரை நிழகழ்த்திய அனைவருக்கும் மாண்புமிகு தமிழகக் கல்வியமைச்சர் அவர்கள் பொன்னாடை போர்த்தி, நினைவுப் பரிசுகள் வழங்கினார். மாண்புமிகு அமைச்சருக்கு விழாக் குழுவினர் பொன்னாடை போர்த்தி நினைவுப் பரிசளித்தார்கள்.

அன்றைய தினம் பகல் 12.30 மணியளவில் அதே மேடையில், மகளிர் கருத்தரங்கம் டாக்டர் அழகப்பா பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் முனைவர் இராதா தியாகராசன் அவர்கள் தலைமையில், ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவ நிகர்நிலைப் பலகலைக் கழகத் துணைவேந்தர் திருமதி லலிதா காமேஸ்வரன் அவர்கள் தொடக்க உரையோடு தொடங்கியது.

'கல்வி' என்னும் தலைப்பில் - தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகப் பேராசிரியை, முனைவர் சிவகாமசுந்தரி அவர்களும், 'குடும்பம்' என்ற தலைப்பில் முனைவர் இராம. சௌந்தரவல்லி அவர்களும், 'சமூகம்' என்னுந் தலைப்பில் தமிழகச் சட்டப் பேரவை உறுப்பினர் திருமதி கவிநிலவு தர்மராஜ் அவர்களும், 'கலை' என்ற தலைப்பில் முனைவர் ஞானகுலேந்திரன் அவர்களும், 'இலக்கியம்' எனுந் தலைப்பில் திருமதி புனிதா ஏகாம்பரம் அவர்களும், 'அரசியல்' என்ற தலைப்பில் தமிழ்நாடு உப்புக் கழகத் தலைவர் திருமதி பா. வளர்மதி அவர்களும் மிக அழகாகவும், ஆணித்தரமாகவும் தத்தம் வாதங்களை எடுத்துவைத்தார்கள்.

பங்கேற்ற மகளிர் அனைவருக்கும் பொன்னாடை போர்த்தப்பட்டு, நினைவுப் பரிசுகள் அளிக்கப்பட்டன.

**கருத்தரங்கம்**

அன்று மாலை 4 மணியளவில் - 'தமிழர் கண்ட சமுதாயம்', என்ற பொருளின் கீழ் கருத்தரங்கம் தொடங்கியது.

மாண்புமிகு நீதிபதி திரு புரா. கோகுல கிருஷ்ணன் அவர்கள் தொடக்கவுரையாற்றிய இந்நிகழ்ச்சிக்கு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு கே.ஏ.செங்கோட்டையன் அவர்கள் தலைமை தாங்கினார்.

மாண்புமிகு கால்நடைத்துறை அமைச்சர் திரு இ. மதுசூதனன் அவர்கள் முன்னிலையில் இக்கருத்தரங்கம் நடைபெற்றது.

எள் விழ இடமில்லாத கூட்டம் எனினும், குண்டூசி கீழே விழுந்தாலும் சப்தம் கேட்குமளவிற்கு விழாப் பந்தலில் அமைதி நிலவியது.

அனைத்திந்திய வன்னியர் சங்கத் தலைவர் திரு ஆர். சுப்பிரமணியம் அவர்களும், சிங்கப்பூரிலிருந்து வெளிவரும் 'தமிழ் முரசு' ஏட்டின் ஆசிரியர் திரு திருநாவுக்கரசு அவர்களும், இந்தியக் குடியரசுக் கட்சிப் பொதுச் செயலாளரும் - சட்டப் பேரவை உறுப்பினருமான திரு செ.கு. தமிழரசன் அவர்களும், இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் திரு யு.எல்.எம். மொய்தீன் அவர்களும், அண்ணாமலைப் பல்கலைக்கழக இணை வேந்தர் திரு எம்.ஏ.எம். இராமசாமி அவர்களும், மாண்புமிகு மலேசிய அமைச்சர் முனைவர் டி. மாரிமுத்து அவர்களும், இந்தக் கருத்தரங்கில் அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.





## கலை நிகழ்ச்சிகள்

- அன்று இரவு மாண்புமிகு வணிக வரித்துறை அமைச்சர் திரு வ. சத்தியமூர்த்தி அவர்கள் தலைமையிலும், மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் திரு பி. ஈஸ்வரமூர்த்தி அவர்கள் முன்னிலையிலும் கலை நிகழ்ச்சிகள் அதே அரங்கில் நடைபெற்றன.

திருமதி ஈ. காயத்திரி அவர்களின் வீணை இசை, திரு. ஸ்ரீநிவாஸ் அவர்களின் மாண்டலின் இசை, திரு பாலமுரளிகிருஷ்ணா அவர்களின் இன்னிசை நிகழ்ச்சி ஆகியவை அனைவருடைய உள்ளத்தையும் கவரும் வண்ணம் நடைபெற்றன.

திருமதி கிருஷ்ணகுமாரி நரேந்திரன் அவர்கள் நடத்திய 'புரட்சிக்கவி' நாட்டிய நாடகம், புதுமெருகோடும் புதுமையோடும் விளங்கியது.

## இராசராசன் மணிமண்டபம்

காலை 10 மணி முதலே தஞ்சை மாநகரின் குறிப்பிட்ட அரங்குகளில் கலை நிகழ்ச்சிகள் தொடங்கின.

இராசராசன் மணிமண்டபத்தில் திருமதி விசயலக்குமி நவநீத கிருட்டிணன் அவர்களின் நாட்டுப்புறப் பாடல்கள் நிகழ்ச்சி - செல்வன் பதஞ்சலி மகாலிங்கம் அவர்களின் புல்லாங்குழல் இசை நிகழ்ச்சி - திருமதி சரோஜா சுந்தரம் அவர்களின் தேவாரப் பண்ணிசை, பம்பாய் சகோதரிகள், திருமதி சுதா ரகுநாதன் ஆகியோரின் இன்னிசை ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

## பெரியகோயில்

அன்று மாலை 6 மணி முதலாகவே தஞ்சைப் பெரிய கோயில் நாட்டிய அரங்கத்தில் நடன நிகழ்ச்சிகள் தொடர்ந்தன.

செல்வி அகிலா சங்கர், செல்வி சிந்தூரி, திருமதி சுஜாதா சீனிவாசன், திருமதி உமா ஆனந்த் குழுவினரோடு தனித்தனியே நடன நிகழ்ச்சிகள் நடத்தினார்கள்.

## பள்ளித்திடல்

கலியாண சுந்தரனார் நினைவுப்பள்ளியில், அன்று மாலை 7 மணியளவில் திரு.வி.பி. தனஞ்செயனின் நாட்டிய நாடகமும் - திரு எஸ்.வி. இராமதாசின் 'இரணியன்' நாடகமும் மிகச்சிறப்பான வகையில் நடத்தப்பெற்றன.


## திலகர் திடல்

அன்று மாலை 6.30 மணியளவில், திலகர் திடலில் தொடங்கிய கலைநிகழ்ச்சிகள், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு கா.ப. பட்டாபிராமன் அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு. கே.ஏ.கிருஷ்ணசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றன.

## பல்கலைக்கழகம்

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் உள்ள அரங்கத்தில், திரு.நா.முத்துக்குமாரசாமியின் 'சவால்' நாடகமும், கவிஞர் சுப்பு ஆறுமுகத்தின் வில்லுப்பாட்டு இசை நிகழ்ச்சியும், திரு.விஸ்வேஸ்வரனின் 'சந்தூர்' நிகழ்ச்சியும் காண்போர் - கேட்போர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும்படி நடத்தப்பட்டன.





# உலகத் தமிழ் மாநாடு - நான்காம் நாள் நிகழ்ச்சிகள்

**மா**ர்கழி மாதம் ஆதலால், தமிழகம் எங்கும் அதிகாலையில் திருப்பாவை, திருவெம்பாவைப் பாடல்கள் பனிக்குளிரோடு பரவலாக எங்கும் இசைக்கப்படுவதைக் கேட்டு மகிழலாம்.




எட்டாவது உலகத் தமிழ் மாநாடு மார்கழியில் வந்தாலும் வந்தது - தஞ்சை மாநகரம் வழக்கத்திற்கு மாறான இசை மழையில் நனைந்திடலாயிற்று. காலை வேளையில் திருப்பாவை திருவெம்பாவை மட்டுமல்ல; காலை முதலே வீதியெங்கும் நாதசுரம், புல்லாங்குழல், வயலின் போன்றவற்றின் தனி இசைகளும் ஒலித்த வண்ணம் இருந்தன.

நகரின் முக்கிய வீதிகளிலெல்லாம் வாகனப் போக்குவரத்து கட்டுப்படுத்தப்பட்டிருந்ததால், மக்கள் சோர்வின்றி நடக்கச் செய்தது மேற்கண்ட இசை ஒலிபரப்பு.

### வீதி வனப்பு

வீதிகளின் இருமருங்கிலும் நகர் முழுதும் பலநிறப் பட்டுக் கொடிகள், புலி, வில், கயல் ஆகிய மூவேந்தர்களின் சின்னமும், எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டின் இலட்சினையும் மிளிரும் கொடிகள், தென்னை ஓலை, பனை



**மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டையொட்டி 'இலக்கியச்சோலை' என்னும் திரைப்படத்தை வெளியிட்டார். மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் படச்சுருளைப்பெற்றுக் கொண்டார். (1.1.95)**

ஓலைத் தோரணங்கள், விதம் விதமான அலங்கார வளைவுகள், வகை வகையான வாசகங்கள் கொண்ட வரவேற்புப் பதாகைகள், வண்ண வண்ணச் சுவரொட்டிகள் - தஞ்சைத் தரணியிலே மட்மல்ல; சுற்றுப்புற நகரங்கள்- கிராமங்களிலெல்லாம் அணி செய்தன.

திருவிழாக் காணச் செல்வோர் போலக் குடும்பம் குடும்பமாகச் செல்லும் மக்கள் வெள்ளத்தின் முகமெல்லாம் மகிழ்ச்சியின் துள்ளாட்டம் தெரிந்தது.

பானகம், நீர்மோர், தண்ணீர் ஆகியவை ஆங்காங்கே தனிப்பந்தல்கள் மூலம் மக்களுக்கு வழங்கப்பட்டன. சின்னஞ்சிறு பள்ளிச் சிறார்கள் அந்தப் பணியில் சிற்றெறும்புகளாகச் சுறுசுறுப்போடு செயல்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

ஆங்காங்கே ஆண் - பெண் கழிப்பிடங்களும் புதிது புதிதாய் அமைக்கப்பட்டிருந்தன.

**கண்காட்சிகள்**

சரசுவதி மகால், செயின்ட் பீட்டர்ஸ் மேநிலைப் பள்ளி போன்ற நகரின் முக்கிய இடங்களில் பலவகைக் கண்காட்சிகள் அமைக்கப்பட்டிருந்தன. மக்கள் அங்கெல்லாம் பலாப்பழத்தில் ஈ போல் மொய்த்தனர்.

தொள்ளக்காது மண்டபம் அருகே புத்தகக் கண்காட்சி மாபெரும் அளவில் அமைக்கப்பட்டிருந்தது. தமிழ் நாட்டுப் பதிப்பாளர்கள் அனைவரும் அங்கே கடைவிரித்திருந்தனர். தமிழ் வளர்ச்சித் துறை மூலம் இராசராசன் மணிமண்டபத்தில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சியில் தமிழ் வளர்த்த சான்றோர்களின் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டிருந்தன.

தமிழன்னை, திருவள்ளுவர், இளங்கோவடிகள், கம்பர், பாரதியார், பாரதிதாசன் திருவுருவச் சிலைகளும் அக்கண்காட்சியில் இடம் பெற்றிருந்தன.

**காவலர் அணிவகுப்புத் திடல்**

எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் நான்காம் நாள் நிகழ்ச்சிகள் - காவலர் அணி வகுப்புத் திடலில் காலை 9 மணிக்கே டாக்டர் சேலம் ஜெயலட்சுமி அவர்களின் இன்னிசையோடு தொடங்கியது.

10 மணியளவில் - 'இருபத்தொன்றாம் நூற்றாண்டும் கலைகளும்' என்கிற தலைப் பின் கீழான கருத்தரங்கம் தொடங்கியது.

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.எஸ். கண்ணப்பன் அவர்கள் தலைமை யில் நடைபெற்ற இக் கருத்தரங்கில், மாண்பு மிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் திரு. எஸ். ரகுபதி அவர்கள் தொடக்கவுரை ஆற்றினார்.

மாண்புமிகு மலேசிய அமைச்சர் திரு. டத்தோ குமரன் அவர்கள் முன்னிலை வகித் தார்.

இக்கருத்தரங்கில் முனைவர் மீனாட்சி முருகரத்தினம் அவர்கள் 'இயற்கை' என்ற தலைப்பிலும், பேராசிரியர் வீ.பா.க.சுந்தரம் அவர்கள் 'இசை' என்ற தலைப்பிலும், முனை வர் என்.பெருமாள் அவர்கள் 'நாடகம்' என் கிற தலைப்பிலும், முனைவர் பத்மா சுப்பிர மணியம் அவர்கள் 'நாட்டியம்' என்ற தலைப் பிலும், திரு. பாரதிராஜா அவர்கள் 'திரைப் படம்' என்ற தலைப்பிலும், திரு கணபதி ஸ்தபதி அவர்கள் 'சிற்பக்கலை' என்ற தலைப்பிலும், அரிய உரை ஆற்றினார்கள்.

பங்கேற்றோருக்கெல்லாம், விழாக் குழு வினர் சார்பில் பொன்னாடை போர்த்தி, நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன.

**மாணவர் அரங்கம்**

எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டையொட்டி மாணவ மாணவிகளிடையே நடத்தப்பட்ட பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்றோர் கருத்தரங்கம் 12.30 மணியளவில் தொடங் கியது.

பள்ளியளவில் முதல் பரிசு பெற்ற திருச் செங்கோடு அரசு மேனிலைப் பள்ளி மாண வன் திரு. கே. கமலக்கண்ணன், இரண்டாம் பரிசு பெற்ற தருமபுரி விஜய் வித்தியாலயா மாணவி செல்வி. சுல்தானா தில்ரஷ் ஆகி யோரும் - பல்கலைக்கழக அளவில் முதல் பரிசு பெற்ற, சென்னைப் பல்கலைக்கழகக் குற்றவியல் துறையைச் சேர்ந்த, திரு கே. தர்பகராஜ் கல்லூரியளவில் முதல்பரிசு பெற்ற சென்னை எஸ்.ஆர்.எம். உடலியக்க வியல் கல்லூரி மாணவி செல்வி ப.காயத்திரி ஆகியோர் இக்கருத்தரங்கில் தமது நாவன்மை காட்டினார்கள்

இக்கருத்தரங்கில் பங்கேற்ற மாணவ மாணவிகளுக்கெல்லாம், தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருவெங்கடசலம் அவர்கள் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்.

**முதல்வர் பரிசளித்தல்**

அன்று மாலை 4 மணியளவில் அதே அரங்கில் நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சி யொன்றில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் கலந்து கொண்டு, மாநாடு வெற்றி பெறத் துணை நின்ற அரசு தலைமைச் செயலாளர் திரு. அரிபாஸ்கர், காவல்துறை தலைவர் திரு. சு.ஸ்ரீபால், காவல்துறை கூடுதல் தலைவர்



திரு.தேவாரம் ஆகியவர்களுக்கு நினைவுப் பரிசுகள் வழங்கினார்.

**இலக்கியச் சோலைக் கலைஞர்கள்**

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு.எஸ்.டி.சோமசுந்தரம் அவர்கள் வரவேற் புரையோடு தொடங்கிய இந் நிகழ்ச்சியில் 3.1.95 அன்று நடைபெற்ற மகளிர் கருத் தரங்கில் கலந்து கொண்டவர்களுக்கெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனிப் படப் பரிசுகள் வழங்கினார்.

செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் அவர்களால், மாநாட்டையொட்டிச் சிறப்புறத் தயாரிக்கப்பட்டிருந்த 'இலக்கியச் சோலை' திரைப்படத்தின் பொருட்டு, அதில் பங்கேற்றி ருந்த கலையுலகினர் திரு.ஏவி.எம். சரவணன், திரு.எஸ்.பி.முத்துராமன், திரு.ஆர்.வி.உதய குமார், திரு.டி.கே.இராமமூர்த்தி, திருமதி மனோரமா, திரு ஆர்.எஸ். மனோகர், திருமதி ஸ்ரீவித்யா, திரு.பிரபு, திரு கார்த்திக், திரு சரத் குமார், செல்வி.சுகன்யா, புலவர் புலமைப் பித்தன், திரு ஏ.ரமேஷ் பிரசாத், முனைவர் இரா. செல்வக் கணபதி, திரு அப்துல் ரகுமான், திரு டி.எஸ்.நாகராசன் ஆகியோருக் கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நினைவுப் பரிசளித்தார்.

மாநாட்டையொட்டி நடைபெற்ற கலை நிகழ்ச்சிகள் சிறப்புற நடைபெற'த்'துணை நின்ற திரு குன்னக்குடி வைத்தியநாதன் அவர்களுக் கும், கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்றோர் அனைவருக்கும், கல்வித் துறைச் செயலாள ருக்கும், பி.பி.சி.யைச் சேர்ந்த திரு ஆர்.மகா தேவன் அவர்களுக்கும், யுனஸ்கோ கூரியரைச் சேர்ந்த மணவை முஸ்தபா அவர் களுக்கும், மாநாட்டில் பங்கேற்ற வெளி நாட்டுப் பிரதிநிதிகள், சிறப்புக் காவல் துறையினர், கட்டுரை - சொற்பொழிவுப் போட்டிகளில் வென்ற மாணவ மாணவி களுக்கும் கூட மாண்புமிகு முதல்வர் அவர். களால் பரிசுகள் வழங்கப்பட்டன.

தமிழகப் புலவர் குழுவினர் அனைவருக் கும் தம் திருக்கரத்தால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்.

**யானை பரிசு**

மாண்புமிகு தமிழக வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி.சோமசுந்தரம் அவர்களும், மாண்புமிகு மலேசிய அமைச்சர் டத்தோ சாமிவேலு அவர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நினைவுப் பரிசுகள் வழங்கிச் சிறப்பித்தார்கள்.


எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டை மிகச் சிறப்பாக நடத்தியமைக்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தொழிலதிபர் திரு வி.ஜி.பி.சந்தோஷம் அவர்கள் ஓர் பெண் யானைக்குட்டியைப் பரிசளித்தார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அதற்குக் 'குந்தவை நாச்சியார்' என்று பெயரிட்டுத் தஞ்சைப் பெரிய கோயிலுக்கு அதை அன்பளிப்பாக வழங்குவதாக அறி வித்தார்.

விழா முடிவில் - அரசு தலைமைச் செய லாளர் என். அரிபாஸ்கர் அவர்கள் நன்றி யுரையாற்றினர்.

**கவியரங்கம்**

அன்று மாலை 6 மணியளவில், அதே மேடையில் 'தமிழ்ப் புலவோர் கண்ட சால்புகள்



என்ற பொருளின் கீழ் உவமைக் கவிஞர் சுரதா அவர்கள் தலைமையில் கவியரங்கம் நடைபெற்றது.

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி. புலவர் இரா. இந்திரகுமாரி அவர்கள் தொடக்கவுரையாற்றினார்.

டத்தோ எஸ். சுப்பிரமணியம் அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற இக்கவியரங்கில் முனைவர் க. சிவகாமசுந்தரி, கவிஞர் இளந்தேவன், கவிஞர் மணிமொழி, கவிஞர் ஐ.உலகநாதன், கவிஞர் இளஞ்செழியன், கவிஞர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன், கவிஞர் நாகூர் ஜபருல்லா - ஆகியோர் கலந்துகொண்டு பைந்தமிழ்க் கவிபாடினர்.

**நினைவாற்றல் நிகழ்ச்சி**

அன்றிரவு 9 மணியளவில், திருக்குறள் இரா.கனகசுப்புரத்தினம் அவர்கள் முன்னின்று நடத்திய பதினாறு கவனக நினைவாற்றல் நிகழ்ச்சி மிகச் சிறப்பாக நடைபெற்றது.

**கலைநிகழ்ச்சிகள்**

உலகத் தமிழ் மாநாட்டின் எட்டாவது மாநாட்டின் 4-வது நாளான 4.1.95 அன்றிரவு காவலர் அணிவகுப்புத்திடலில், மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு கு.லாரன்ஸ் அவர்கள் தலைமையிலும், மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் திரு காந்திராஜன் அவர்கள் முன்னிலையிலும் திருமதி சித்ரா விஸ்வேஸ்வரன் அவர்களின் பாஞ்சாலி சபதம் நாட்டிய நாடகமும், டாக்டர் வேம்பட்டி சின்னசத்யம் அவர்களின் 'பாரிஜாதம்' நாட்டிய நாடகமும் நடைபெற்றன.

திரு டி.என்.கிருஷ்ணன் அவர்கள் வயலின் இசை நிகழ்ச்சி, பம்பாய் சகோதரிகளின் இன்னிசை, திரு ராஜாரெட்டி - திருமதி ராதா ரெட்டி குச்சுப்புடி நாட்டிய நிகழ்ச்சி ஆகியவைகளும் அழகுற நடைபெற்றன.

**இராசராசன் மணிமண்டபம்**

தஞ்சைத் தரணியில், தக்கபடி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தவாறு ஐந்து இடங்களில் காலை முதலே அற்புதமான கலை நிகழ்ச்சிகள் நடைபெறலாயின.

இராசராசன் மணிமண்டபத்தில் இசை அரங்கம் காலை 10.30 மணியளவில் தொடங்கியது. திரு.டி.எல்.மகராஜன் இன்னிசை நிகழ்ச்சியும் - அதையடுத்து, மாலை 6 மணியளவில் திருமதி காயத்திரியின் வீணை இசை நிகழ்ச்சியும் நடைபெற்றது.

அதன்பின், செல்வன் சுசாங் புல்லாங்குழலிசை வழங்கினார். அடுத்து, பிரியா சகோதரிகள், திரு.ராஜம் ஐயர் இன்னிசை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

**பெரிய கோயில்**

தஞ்சைப் பெரிய கோயில் நாட்டிய அரங்கத்தில், அன்று மாலை 6 மணியளவில் செல்வி ரீலா ஹோட்டாவின் நடன நிகழ்ச்சியும் - அதையடுத்து திருமதி பாரதி சிவாஜி மோகினியாட்ட நிகழ்ச்சியும் அழகுற நடைபெற்றன.

**கலியாணசுந்தரனார் பள்ளி**

கலியாணசுந்தரனார் நினைவுப்பள்ளி திடலில் மாலை 6.30 மணிக்குத் திருமதி பார்வதி ரவி கண்டசாலா நடனமும், அதன்பின், திரு. ஜாகீர் உசேன் குழுவினர் நடனமும், திருமதி கிருஷ்ணகுமாரி நரேந்திர குழுவினரின் 'புரட்சிக்கவி' நாட்டிய நாடகமும் நடைபெற்றது.

பிறகு, டாக்டர் ஸ்ரீநிதிரங்கராஜன் குழுவின் நடன நிகழ்ச்சி காண்போரைக் களிப்படையச் செய்தது.

**திலகர் திடல்**

உலகத் தமிழ் மாநாட்டின் நான்காவது நாளான 4.1.95 அன்று திலகர் திடலில் மாலையில் நடைபெற்ற திருஉன்னிகிருஷ்ணன் இசை நிகழ்ச்சி - மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.அ.மா.பரமசிவம் அவர்கள் தலைமையில், மாண்புமிகு மீன் வளத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

அதையடுத்து டாக்டர் பத்மா சுப்பிரமணியம் அவர்கள் நடன நகழ்ச்சியும், அதைத் தொடர்ந்தாற்போல மாஸ்டர் ஸ்ரீதர் நாடகக் குழுவினரின் வெற்றிக்கனி நாடகமும் காண்போர் மகிழ நடைபெற்றது.

**தமிழ்ப்பல்கலைக் கழக அரங்கு**

தமிழ்ப்பல்கலைக்கழக அரங்கத்தில் மாலை 6 மணியளவில் டாக்டர் சுப்பிரமணியம் அவர்களின் நாட்டுப்புற இசை நிகழ்ச்சி தொடங்கியது.


அதன்பின், திரு யூ. சீனிவாஸ் மாண்டலின் இசை நிகழ்ச்சியும் 'கூத்துப்பட்டறை' குழுவினரின் தப்பாட்டமும் பார்வையாளரைப் பேருவகையால் தலையாட்டவும், தாளம் போடவும் வைத்தன.




# உலகத் தமிழ் மாநாடு: ஐந்தாம் நாள் நிகழ்ச்சிகள்

**எ**ட்டாவது உலகத் தமிழ் மாநாட்டை யொட்டி தஞ்சாவூரில் குடிநீர் வசதி பெருக்கப்பட்டது; தடையற்ற மின்சார வசதி செய்யப் பட்டது; சாலை வசதி விரிவாக்கப் பட்டது; மக்கள் நல்வாழ்வு வசதிகள் பெருக்கப் பட்டன; புதுப்புதுக் குடியிருப்புகள் அமைக்கப்பட்டன.

இவ்வாறான அடிப்படை வசதிகள் மட்டு மல்ல; தஞ்சாவூர் நகராட்சி மற்றெல்லாக் குறைகளையும் நீக்குமளவிற்கு வலுவாக்கப்





பட்டது. அதன் மூலமாகத் தஞ்சை நகரம் புதுப் பொலிவு பெற்றது; சோடியம் ஆவி விளக்குகளின் ஒளிவெள்ளத்தில் சாலைகள் சாலைச் சந்திப்புகள் யாவும் ஒளிமயமாயின; சிவகங்கைப் பூங்கா பிருந்தாவனம் போலாகியது; ராஜப்பா பூங்காவில் பசுமைவளம் தேக்கப்பட்டது; அரண்மனை புதுப்பிக்கப் பட்டது; கிராமியக் கலைநிகழ்ச்சிகளுக்காகப் பத்துத் தெருமேடைகள் அமைக்கப்பட்டன.

உலகத் தமிழ் மாநாட்டு நிகழ்ச்சிகள் நடைபெறும் பகுதிகள்தோறும் சுற்றுப்புறச் சுகாதாரம் பேணப்பட்டது.

மொத்தத்தில் தஞ்சை மாநகரில், அங்கிங் கெனாதபடி எங்கும் விழாக்கோலம்தான்!

**காவலர் அணிவகுப்புத் திடல்**

எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் நிறைவு நாளான **5.1.95** வியாழனன்று, காலை **9** மணியவில், காவலர் அணிவகுப்புத் திடல் நிகழ்ச்சிகள், செல்வன் தா.சிவசங்கரின் தேவார இன்னிசையோடு தொடங்கின.


அந்நிகழ்ச்சி முடிவில், இசை நிகழ்ச்சியைத் திறம்பட நிகழ்த்திய அவ்விளைஞருக்கு மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு.கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்.

**தமிழும் அறிவியலும்**

அதையடுத்துக் கருத்தரங்கம் நிகழ்ச்சி - இந்திராகாந்தி தேசிய திறந்தவெளிப் பல்கலைக் கழகம் (புது டில்லி) துணை வேந்தர் திரு.வ.செ.குழந்தைசாமி அவர்கள் தலைமையில் தொடங்கியது.

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு கா.ப.பட்டாபிராமன் அவர்கள் தொடக்க உரையாற்றினார்.

டாக்டர் எம்.ஜி.ஆர். பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் பி.பி.ராஜன் அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில்'மருத்துவம்' என்ற தலைப்பில் தஞ்சை மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த டாக்டர் எஸ்.நரேந்திரன் அவர்களும், 'கணியியல்' என்ற தலைப்பில் எழுத்தாளர் திரு.எஸ்.ரங்கராஜன் (சுஜாதா) அவர்களும், 'பொது விஞ்ஞானம்' என்ற தலைப்பில் பாரதிதாசன் பல்கலைக்கழகத் துணைவேந்தர் திரு.முத்துக்கருப்பன் அவர்களும் கருத்துச் செறிவு மிக்க உரையாற்றினார்கள்.






கருத்தரங்கின் முடிவில், அனைவருக்கும் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் பொன்னாடை போர்த்தி, நினைவுப் பரிசுகள் வழங்கினார்.

**கலை நிகழ்ச்சிகள்**

இராசராசன் மணிமண்டபம் இசை அரங்கத்தில் காலை 10 மணிக்கே திரு டி.எம்.கிருஷ்ணா இசை நிகழ்ச்சி தொடங்கியது. அதையடுத்து செல்வி சோபனா இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

மாலை 7 மணியளவில், சிக்கல் சோபனாவின் புல்லாங்குழல் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

**பெரிய கோயில்**


தஞ்சாவூர்ப் பெரியகோயில் நாட்டிய அரங்கத்தில், மாலை 6 மணியளவில் டாக்டர் நாகசாமி குழுவினரின் நாட்டிய நாடகம் சிறப்புற்றது.

**கலியாணசுந்தரனார் பள்ளி**

கலியாணசுந்தரனார் நினைவுப் பள்ளியில் மாலை 7 மணியளவில் திரு நடனம் நடராஜ் அவர்களின் நாட்டியம் தொடங்கியது; அதையடுத்து, சாந்தி ஸ்டேஜ் கிரியேஷன் சாரின் 'இது எங்க ஊரு' என்ற நாடகம் மக்கள் திரளை மகிழச் செய்தது.

**திலகர் திடல்**

திலகர்திடல் கலை நிகழ்ச்சிகள் இரவு 8 மணியளவில், மாண்புமிகு செய்தி-விளம்பரத் துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் தலைமையில் மாண்புமிகு சுற்று



லாத்துறை அமைச்சர் திரு.எஸ்.நாகூர் மீரான அவர்கள் முன்னிலையில் தொடங்கின.

முதலில் திருப்பாம்புரம் சண்முக சுந்தரம் அவர்களின் இன்னிசை, அதன்பின் திரு. டி. என்.கிருஷ்ணன் அவர்களின் வயலின் இசை, முடிவாக 'நேஷனல் தியேட்டர்ஸ்' சார்பில் திரு ஆர்.எஸ். மனோகர் அவர்கள் நடத்திய 'திருநாவுக்கரசர்' நாடகம் என்பதோடு எட்டாவது உலகத்தமிழ் மாநாட்டின் கலை நிகழ்ச்சிகள் நிறைவுற்றன.

**நிறைவு விழா நிகழ்ச்சிகள்**

**5.1.1995** அன்று மாலை **3.30** மணியளவில், தஞ்சாவூரில் உள்ள அன்னை சத்தியா விளையாட்டரங்கத்தில் நிறைவுவிழா நிகழ்ச்சிக்கு ஏற்பாடாகியிருந்தது.

அன்று காலை முதலே தஞ்சை நகர வீதியெங்கும் மக்கள் வெள்ளம் அலை மோதியது. ஆறெல்லாம் போய்க் கடலில் கலப்பது போல அவ்வளவு பேரும் அன்னை சத்தியா விளையாட்டரங்கத்தை வந்தடைந்தார்கள்.

அங்கே, நாதசுர இசைமேதை திரு ஷேக் சின்ன மௌலானா அவர்கள் குழுவினரின் மங்கள இசை இழைந்துகொண்டிருந்தது!

**முதல்வர் பிரதமர்**

மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்கள் சரியாக 4 மணியளவில் விழாவுக்கு வந்து சேர்ந்தார். மாண்புமிகு முதல் அமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், மலர்ச் செண்டு வழங்கி, பிரதமரை வரவேற்று விழா மேடைக்கு அழைத்து வந்தார்.

அந்த மாபெரும் திடலில் மேடைக்கு நேர் எதிரே தொலைவில் வண்ணச் சீருடை அணிந்து அமர்ந்திருந்த மாணவமணிகள் நிறங்களின் மூலமே பிரதமருக்கும், முதலமைச்சருக்கும் வாழ்த்தும், வரவேற்பும் தெரிவித்து மகிழ்வித்தார்கள்.

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு.எஸ்.டி.சோமசுந்தரம் அவர்கள் வரவேற்புரையோடு, எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டு நிறைவு விழா நிகழ்ச்சிகள் தொடங்கின.

பின்னர் மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் தலைவர் திரு. நொபொரு கரஷிமா அவர்களுக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் பொன்னாடையும் மலர்ச் செண்டும் வழங்கி மகிழ்ந்தார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, விழாக்குழுவின் சார்பில், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு.எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் பொன்னாடை அணிவித்தார். அதன்பின், திரு.நொபொரு கரஷிமா அவர்களும் முதலமைச்சருக்குப் பொன்னாடை வழங்கி மரியாதை செலுத்தினார்.

அதைத் தொடர்ந்து, விழாக்குழு மூலம், மேடையிலிருந்த அயல்நாட்டுப் பேராளர்கள் உட்பட முக்கியமானவர்களுக்கெல்லாம் பொன்னாடைகள் அணிவிக்கப்பட்டன.

**சிறப்புரை - தலைமையுரை**

மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் திரு.சேடப்பட்டி இரா.முத்தையா அவர்களும், அவருக்குப்பின், மாண்புமிகு மத்திய அரசு தகவல் தொடர்புத்துறை இணை அமைச்சர் திரு.சுக்ராம் அவர்களும் சிறப்புரையாற்றினார்கள்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், நிறைவு விழாத் தலைமையுரை ஆற்றினார்; அப்போது அவர் தமது உரையில் அரிய பல அறிவிப்புகளை வெளியிட்டார்.

**சிறப்பு அஞ்சல் தலை**

எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டினையொட்டி, மத்திய அரசு உருவாக்கியிருந்த தெய்வப்புலவர் திருவள்ளுவர் உருவம் கொண்ட சிறப்பு அஞ்சல் தலையை மாண்புமிகு இந்திய பிரதமர் அவர்கள் இந்த விழாவில் வெளியிட்டார்.

அதனை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

அதன் பின்னர் - மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு பி.வி.நரசிம்மராவ் அவர்கள் விழா நிறைவுப் பேருரை ஆற்றினார்.

அவருடைய ஆங்கில உரையைத் திரு. வ.செ.குழந்தைசாமி அவர்கள் தமிழில் மொழி பெயர்த்தார்.

முடிவில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் தலைவர் அவர்களுக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் எட்டாவது உலகத்தமிழ் மாநாட்டு மலர்களையும், நினைவுப் பரிசையும் வழங்கி மகிழ்ந்தார்.

கடைசியாக மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு கே.ஏ.கிருஷ்ணசாமி அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

# வருகின்ற நூற்றாண்டில் அறிவியல் தமிழ் மலரட்டும்!

## எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் மாண்புமிகு பிரதமர் அவர்கள் உரை



**தஞ்சைத் தரணியில், எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் நிறைவு விழாவில், மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு பி.வி. நரசிம்மராவ் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். அப்போது அவர் குறிப்பிட்டதாவது:**

மத்திய தரைக்கடல் மற்றும் தென்கிழக்கு நாடுகளுக்கும் கப்பல் வாணிபம் நடத்திய வர்கள் முற்காலச் சோழர்கள்;/ தொடர்ந்து வெளிநாடுகளுடன் வாணிபத்தை வளர்த்த வர்கள். அப்படி மற்ற நாடுகளுடன் வர்த்தக உறவை வளர்த்த நமது மரபு இப்போது தனிமைப்படுத்தும் போக்கை ஊக்குவிக்கக் கூடாது./ வெளிநாடுகளில் தூதர் நியமித்து கலாச்சாரத்தை வளர்த்த சோழ மன்னர் களின் பெருமை என்றுமே நமக்குப் பெரு மைப்படத் தக்க அம்சமாகும்.

அரசியல் ரீதியாகத் தீர்க்க தரிசனம் கொண்ட தமிழ் மன்னர்கள் வர்த்தகத்தை வளர்த்தனர்.

வெளிநாடுகள் சென்று வர்த்தகத்தை நடத்தத் தூதர்கள் நியமித்தனர்.

காவிரிப்பூம்பட்டினம் என்ற பூம்புகாரில் பல சமூகத்தினர் மற்றும் இனத்தினர் கவுர வமாக இணைந்து வாழ்ந்த ஆதாரங்கள் சோழர்களின் பெருமையைக் காட்டுபவை. பல மொழிகள் பேசினாலும், பலவித வேறு பாடுகள் இருந்தாலும் எவ்விதப் பாகுபாடும் இன்றி வாழ்ந்தனர். ஆகவே தனிமையாக இருக்கும் போக்கைத் தமிழ்க் கலாச்சாரம் வலி யுறுத்தவில்லை. ஆகவே வர்த்தகத்தில் தனிப் பட்ட தனித்துவம் தேவை என்பது இன்று ஏற்க முடியாதது.

நமது நாட்டின் வரலாற்றைப் புரிந்து கொள்ளாதவர்கள்தான் தனித்தன்மை தேவை என்று கூற முடியும்.

திராவிட மொழிகளில் தமிழ் மொழி மிகவும் தொன்மை வாய்ந்த-/பழமைமிக்க, புகழ்மிக்க மொழி ஆகும். வளமையான மொழியான தமிழ் பல கருவூலங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

எனவேதான், தமிழர்கள் தங்கள் மொழியை, கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே தோன்றிய மொழி என்று பெரு மையுடன் கூறுகிறார்கள். அதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

5 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்திய ஹாரப்பா நாகரீகத்தில் தமிழர்களின் நாகரீகம் பற்றியும், தமிழ் மொழி பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. வால்மீகி இராமா யணத்தில் தமிழ் மன்னர்களான பாண்டிய மன்னர்களின் பண்பாடு பற்றிக் கூறப் பட்டுள்ளது.

மேலைநாடுகளில் தமிழ்மொழிக்கு நல்ல

வரவேற்பு உள்ளது. பல மேலை நாடுகள் தமிழ் மொழியை ஏற்றுக்கொண்டுள்ளன. மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் ஆட்சி மொழியாகவும் தேசிய மொழியாகவும் உள்ளது.

மற்ற மொழிகளின் இலக்கணம் மொழியின் தன்மையை மட்டும் பற்றிப்பேசும்போது தமிழ் மொழி இலக்கணம் மட்டும் வாழ்க்கை நெறியையும் கற்றுத் தருகிறது. சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற பல உயர்ந்த காவியங்களைத் தன்னகத்தே கொண்ட தமிழ் மொழியின் பங்களிப்பு பாராட்டத் தக்கது ஆகும். நாயன்மார்களின் பணி ஆன்மீகத் துறையைச் சேர்ந்தது மட்டும் இல்லாமல் சாதி, சமய வேறுபாடுகளைக் களையும் வகையில் உள்ளது என்பதையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழ்மொழியின் பெருமைகளில் திருக்குறளும் கம்பராமாயணமும் குறிப்பிடத் தக்கவை ஆகும்.

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்றார் திருவள்ளுவர், 'காக்கைக் குருவி எங்கள் சாதி' என்று பாடினார் பாரதியார். இதேபோல் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற உயர்ந்த தத்துவமும் தமிழ்மொழியில் உள்ளது.

இவையெல்லாம் தமிழர்களின் சர்வதேசக் கண்ணோட்டத்தையும் பெருமையையும் உணர்த்துவதாக உள்ளன.

இந்தியாவின் கலை, காலச்சாரம், பண்பாட்டுப் பெருமையில் தமிழ்மொழியின், தமிழ்நாட்டின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.

எட்டாவது உலகத் தமிழ் மாநாடு நடைபெறும் இந்தத் தஞ்சாவூர் கலை, இலக்கியம், சிற்பம், ஓவியம் ஆகியவற்றில் பாரம்பரியம் மிக்க புகழ்கொண்ட நகரம் ஆகும். இசை மேதைகளான தியாகராஜர், முத்துசாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரி ஆகியோர் இங்குதான் தோன்றினார்கள். தஞ்சைப் பெரிய கோவில் தமிழர்களின் கட்டடக் கலைக்குச் சான்றாக விளங்குகிறது. இங்கு தயாராகும் ஓவியங்களும், கைவினைப் பொருட்களும் உலகப் புகழ் பெற்றவை ஆகும். தமிழகக் கட்டடக் கலை இந்தியக் கட்டடக் கலைக்கு விஜயநகரம், கஜுராஹோ போன்ற இடங்களிலும் காண முடியும்.

தமிழ்நாடு கலாச்சாரத்தின் பிறப்பிடமாக விளங்குகிறது. இத்தகைய பெருமைமிக்க

## தஞ்சையில் உலகத் தமிழ் மாநாடு; ரூ.1 கோடி செலவில் தொலைத் தொடர்பு வசதிகள்

**த**ஞ்சையில் உலகத் தமிழ் மாநாட்டுப் பணிகளுக்காக ரூ.1 கோடி செலவில் தொலைத் தொடர்பு வசதிகள் செய்யப் பட்டிருந்தன.

தஞ்சையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டையொட்டி 2 தற்காலிக மின்னணுத் தொலைபேசி நிலையங்கள் 18 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப் பட்டிருந்தது. தற்காலிக மின்னணுத் தொலைபேசித் தொடர்பு மையங்களில் இணைப்புகள் கொடுக்கவும், மாநாட்டில் கலந்து கொள்ளும் மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் மற்றும் மாண்புமிகு பிரதமருக்கு நேரடித் தொலைத் தொடர்பு வசதி ஏற்படுத்த ரூ.19 இலட்சத்து 7 ஆயிரம் செலவில் 13 கிலோ மீட்டருக்குப் புதிய கம்பிகள் போடப்பட்டிருந்தன. இலட்சத்து 8 ஆயிரம் ரூபாய் செலவில் தொலைத்தொடர்பு புதிய வழித் தடங்கள் அமைக்கப் பட்டிருந்தன.

தமிழ் மாநாட்டிற்கென நவீனக் கருவிகள் பஞ்சாபில் இருந்தும் சென்னையில் இருந்தும் கொண்டு வரப்பட்டன. இதற்கு 14 இலட்சத்து 7 ஆயிரம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. 11 இலட்சத்து 2 ஆயிரம் ரூபாய் மதிப்பில் 15 டெலக்ஸ் சாதனங்கள் நிறுவப்பட்டிருந்தன.

தற்காலிகத் தொலைபேசி நிலையம் ஒவ்வொன்றில் இருந்தும் எளிதில் இணைப்பு பெற 30 வழித்தடங்கள் செய்து தரப்பட்டுள்ளன. தற்காலிக மின்னணுத் தொலைபேசி நிலையத்துக்கு இடையே 38 இலட்சம் ரூபாய் செலவில் ஆப்டிக்கல்ஸ் பைபர் கேபிள் போடப்பட்டு இணைப்பு கொடுக்கப்பட்டது.

பொதுமக்கள் உடனுக்குடன் தொடர்பு கொள்ள வசதியாக 15 தொலைத் தொடர்பு மையங்கள் நகரின் பல பகுதிகளில் நிறுவப் பட்டிருந்தன.

உலகத் தமிழ் மாநாட்டிற்கான தொலைத்தொடர்பு இணைப்புகள் வழங்கவும் அவற்றைப் பராமரிக்கவும் தொலைத் தொடர்பு மையங்களை இயக்கவும் 250 பணியாளர்கள் அமர்த்தப்பட்டிருந்தனர்.

# வெள்ளம் போல் தமிழர் கூட்டம்!

**தஞ்சையில் நடைபெற்ற 8-வது உலகத் தமிழ் மாநாட்டைக் காண தஞ்சையில் எங்கு பார்த்தாலும் மக்கள் கூட்டம் அலைமோதியது. எங்குப் பார்த்தாலும் சாலைகள் நிரம்பி வழிந்தன. தஞ்சையில் வரலாற்றுச் சிறப்பு மிக்க தஞ்சைப் பெரிய கோயில், தஞ்சை அரண்மனை, சிவகங்கைப் பூங்கா போன்ற இடங்களில் கூட்டம் அலை மோதியது. தஞ்சை அரண்மனை வளாகப் பகுதியில் உள்ள மராட்டா தர்பார் மண்டபம், அருங்காட்சியகம், புகழ்பெற்ற சரசுவதி மகால் நூலகம் ஆகியவற்றில் மக்கள் வெள்ளம் காணப்பட்டது.**

தமிழ்நாட்டை ஆண்ட மன்னர்கள் கடல் கடந்து வாணிபம் செய்துள்ளனர். இதனால் தமிழ்ப்பண்பாடும்வெளிநாடுகளிலும்பரவி உள்ளது. கிரேக்கம் மற்றும் ரோம நாட்டுடன் தமிழகத்துக்கு வர்த்தகத் தொடர்பு இருந்து இருக்கிறது.

**நயாகரா நீர்வீழ்ச்சியில் நல்வரவு**

உலகிலேயே மிகப் பெரிய நீர் வீழ்ச்சியான நயாகரா நீர் வீழ்ச்சியில் தமிழில் 'நல்வரவு' என்று எழுதி வைக்கப்பட்டு உள்ளது. இதுபற்றி அங்கு உள்ளவர்களிடம் கேட்டபோது உலகிலேயே மிக உயரமான நீர் வீழ்ச்சியான இங்கு உலகிலேயே மிகவும் பழமை வாய்ந்த மொழியில் 'நல்வரவு' என்று எழுதி வைத்திருக்கிறோம் என்று கூறினார்கள்.

இது தமிழ் மொழியின் தொன்மையையும், பெருமையையும் புகழையும் எடுத்துக் காட்டும் நிகழ்ச்சி ஆகும்.

**தங்க நாணயம்**

தமிழர்களின் நாகரிகப் பண்பினையும் தமிழ் மொழியின் பெருமையையும், புகழையும் எடுத்துக்காட்டுவதாக உள்ள இந்த மாநாட்டில், சோழ மன்னனின் தபால் தலையை வெளியிட்டு இருக்கிறேன். விரைவில் இராசராச சோழனின் உருவம் பொறித்த தங்க நாணயம் வெளியிடப்படும். இதற்கான ஏற்பாடுகளை மத்திய அரசு செய்யும்.

நமது இந்தியக் கலாச்சாரம் பல முகங்கள் கொண்டது. இந்தியாவில் பல்வேறு மொழிகளும் ஊக்கப்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ் மொழி தொன்மை வாய்ந்தது. கல் தோன்றி மண் தோன்றாக் காலத்துப் பிறந்தபெருமைமிக்கதுதமிழ்என்பதைமறக்க முடியாது. அசோகர் காலக் கல்வெட்டுக்களில் தமிழரின் ஆட்சி குறித்த குறிப்புகள் காணப்படுகிறது.

தமிழ் நூல்கள் திருக்குறள், பக்தி இலக்கியங்களில் சமதர்மச் சமுதாயப் பார்வை காணப்படுவது பெருமை. அது போல் தமிழ்ச்சங்க இலக்கியப் பாடங்களில் இயற்கைச் சூழல் பாதுகாப்பு பற்றிக்காணப் படுகிறது.

**சங்க காலத்தில் விவசாயத்திற்கு முக்கியத்துவம்**

சங்க காலத்திலேயே தமிழர்கள் விவசாய முக்கியத்துவத்தை உணர்ந்து இருந்தனர். தமிழ் மன்னர்கள், நீர்ப்பாசன வசதிகளைச் செய்து இருந்தனர். கரிகால் சோழன், பாசனத்துக் காகவும், வெள்ளக் கட்டுப்பாட்டுக்காகவும் அணை கட்டினான்.

தமிழ் மொழியும் தமிழ்க் கலாச்சாரமும் பற்றி இங்கு ஆய்வு அரங்குகளில் நடந்த விவாதங்கள் வெறும் விவாதமாக இருக்கக்கூடாது. தேவையான முன்னேற்றம் காணும் வகையில் அந்த ஆய்வுகளைப் பரந்த நோக்கோடு பயன்படுத்த வேண்டும்.

திராவிட மொழிக் குடும்பங்களில் தனது ஆணிவேரைக் கொண்டது தமிழ். மிகவும் பெருமையான மொழி. சிலப்பதிகாரம், மணிமேகலை, பதினெண்கீழ்க்கணக்கு போன்ற மாபெரும் படைப்புகள் உருவானது, திருக்குறள் உலக சமுதாய நெறியைக் காட்டும் சிறந்த நூல். அதனால் இன்றும் மக்களிடம் அதிகமாகப் பேசப்படுகிறது.

தஞ்சை மண்ணில் இசையை வளர்த்த மும்மூர்த்திகள் வாழ்ந்தனர். தியாகராஜ சுவாமிகள், முத்துசாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரிகள் ஆகிய மூவரையும் அடுத்து அருணாசலக் கவிராயர், முத்துத்தாண்டவர், மாரிமுத்தாப் பிள்ளை ஆகியோர் தமிழ் இசையை வளர்த்தனர். சோழர் காலக் கட்டடக் கலைக்குச் சான்று காட்டும் அரிய படைப்புகள் இங்கு உள்ளன.

தமிழ் மற்ற மொழிகளிடம் இருந்து அழகிய கருத்துக்களைப் பெற்றது. சமஸ்கிருதப் பாரம்பரியங்களை ஏற்றிருக்கிறது. அதன்

# சிங்கப்பூரில் கார்ட்டுன் மூலம் தமிழ்ப் பயிற்சி

சிங்கப்பூர் தமிழ் மாணவர்கள் தமிழில் பேச கேலிச்சித்திரங்கள் (கார்ட்டுன்கள்) மூலமாகப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் நல்ல பயன் கிடைத்துள்ளது என்று எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் ஆய்வு அரங்கில் திருமதி இந்திரா கிருஷ்ணன் வழங்கிய ஆய்வுக் கட்டுரையில் கூறப்பட்டிருக்கிறது.

சிங்கப்பூரில் உள்ள தமிழ் மாணவர்கள் தம் அண்டை வீட்டாரிடம் ஆங்கிலத்திலேயே பேசப் பழகிவிட்டனர். அவர்களை வற்புறுத்தினாலும் தமிழில் பேசத் தயங்குகின்றனர். வெட்கப்படுகின்றனர். எனவே, இந்த மாணவர்களின் பேச்சுத் திறனைப் பெருக்க மாணவர்களுக்கு வீடியோவில் கார்ட்டுன் படங்கள் போட்டுக் காட்டப் பட்டன.

மூன்றாம் வகுப்பு படிக்கும் மாணவர்கள் முதலில் இந்த ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டனர். ஆய்வு 10 வாரங்கள் தொடர்ந்து நடந்தன. மாணவர்களின் சிறு சிறு தவறுகளும் கார்ட்டுன்கள் மூலமாக நாசுக்காக எடுத்துக் காட்டப்பட்டன. இதற்கு மாணவர்களிடையே நல்ல வரவேற்பும் மாற்றமும் கிடைத்தன. விரைவில் மாணவர்கள் தமிழ்ப் பேச்சுத்திறன் பெருக்கிக் கொண்டதை நேரடியாகவே உணர முடிந்தது.

எனவே, இனி மாணவர்களுக்குச் சொல்ல நினைக்கும் கருத்துக்களைக் கேலிச் சித்திரங்கள் (கார்ட்டுன்) மூலமாகத் தெரிவித்தால் நல்ல பயன் கிடைக்கும் என்ற உண்மை இதன் மூலம் கண்டறியப் பட்டுள்ளது.

இவ்வாறு அந்த ஆய்வுக் கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

அடிப்படையில் பெரிய காவியங்கள் மலர்ந்தன.

தமிழ் இலக்கியத்துக்கு ஆழ்வார்களும், நாயன்மார்களும் செறிவூட்டி பக்திப் பாடல்களைப் பாடினர். சமஸ்கிருதப் படைப்பு தமிழில் எவ்வளவு அழகாக உருவாகும் என்பதற்குக் கம்பராமாயணம் ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

## எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டுச் செய்திகள் இதழ்தோறும் இடம்பெறும்

எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் செய்திகள் - வாழ்த்தரங்கம், கருத்தரங்கம், கவியரங்கம், கலை நிகழ்ச்சிகள் முதலியன தமிழரசில் இதழ்தோறும் இடம்பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

—ஆசிரியர்

தொல்காப்பியம் வெறும் இலக்கண நூல் அல்ல. வாழ்க்கை நெறிமுறைகளைக் கூறும் நூல், திருக்குறள், பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, பதினெண்கீழ்க்கணக்கு ஆகிய இலக்கியங்கள் தமிழ் மொழிக்குப் பெருமை தருவன ஆகும்.

ஏழைப் புலவரான ஒளவையாரும் எண்ணிப் பார்க்கத் தக்கவர். மன்னவர்கள் முதல் அனைத்துத் தரப்பினரும் தமிழ் மொழிக்கு இலக்கியங்களைத் தந்துள்ளனர்.

அறிவியல் தமிழை வளர்க்க வேண்டும் என்று இந்த 8வது உலகத் தமிழ் மாநாட்டில் கூறப்பட்டது. வருகின்ற 21-ஆம் நூற்றாண்டில் 4-வது தமிழாக, அறிவியல் தமிழ் மலரட்டும் என்று கூறிக் கொள்கிறேன்.

என்னை இந்த 8வது உலகத் தமிழ் மாநாட்டிற்கு அழைத்த தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு நன்றி கூறிக் கொள்கிறேன். இந்த உலகத் தமிழ் மாநாட்டில் அறிஞர்கள் உருவாக்கி உள்ள திட்டங்கள் தமிழுக்கு உயிர் ஊட்டட்டும்.

8வது உலகத் தமிழ் மாநாட்டில் கலந்து கொண்டதில் நான் பெருமையும், மகிழ்ச்சியும் அடைகிறேன். எல்லோருக்கும் என் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள். 9வது உலகத் தமிழ் மாநாட்டிலும் நான் கலந்து கொள்வேன்.

- இவ்வாறு மாண்புமிகு பிரதமர் அவர்கள் பேசினார்.

- 'தமிழ்ச் சங்கம்' மீண்டும் மதுரையில் அமைக்கப்படும்
- 'செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் ஆய்வு நூல்' திட்டம் முனைப்புடன் செயல்படுத்தப்படும்.
- தமிழில் புதிய கலைக்களஞ்சியம் உருவாக அரசு நடவடிக்கை எடுக்கும்.
- அயல்நாட்டுப் பல்கலைக்கழகங்களில் 'தமிழ் இருக்கைகள்' ஏற்படுத்தப்படும்.
- தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கு ரூ.75 இலட்சம் நன்கொடை.

# எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டு நிறைவு விழாவில், மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு

இன்னுயிரினும் இனிய தமிழ் மொழிக்கு, நாம் நடத்திய ஐந்து நாள் ஆராதனையின், நிறைவு நாள் விழாவில் கலந்து கொண்டு, உங்கள் அனைவரையும் காண்பதில், நான் பெருமிதமும் பேருவகையும் அடைகின்றேன்.

தஞ்சைத் தரணியில் ஒரு புறம், வரலாறு காணாத கூட்டம் மற்றொரு புறம், வரலாறு காணாத தமிழ் வளர்ச்சிப் பணிகள். அருந் தமிழையும், பழந்தமிழ்க் கலைகளையும், வளர்த்த தஞ்சைப் பூமி, மீண்டும் ஒரு முறை, அந்தப் பெரும் பேற்றை இன்று பெற்றுள்ளது. தமிழ் மீது பற்றுக் கொண்ட காவலர்கள், தமிழகத்தை ஆண்டபோது இருந்த, தமிழ் காக்கும் உணர்வும் தமிழைப் போற்றும் மாண்பும் மீண்டும் ஒரு முறை, இங்கே தஞ்சையில் அரங்கேற்றப்பட்டுள்ளது என்றால், அது மிகையாகாது. கடந்த 5 தினங்களாகத் தஞ்சை மாநகரத்தின் கோலாகலமே, இதற்குச் சான்று ஆகும்.

இன்றைய சூழ்நிலையில், ஒரு மொழி, சர்வதேச சமுதாயத்தில், இடைவிடாது நிகழ்ந்து கொண்டிருக்கிற, சமூக, பொருளாதார, உணர்ச்சிபூர்வமான மாறுதல்களையும் அறிவியல் கண்டுபிடிப்புகளால் ஏற்படுகின்ற, அடிப்படைப் பண்பு, மற்றும் மதிப்பீடு மாற்றங்களையும் எதிர்கொண்டு; புதிய மாறுதல்களுக்கு ஏற்ப, தன்னைத் தயார் செய்து கொள்ள வேண்டிய, ஒரு சூழ்நிலையில் உள்ளது. புதிய மாற்றங்களை, ஒரு மொழியினால் ஏற்க முடியாமல் போனால், அதனால் ஏற்படுகின்ற தாக்கங்கள், அந்த மொழியின் வலிமையைக் குறைத்து விடும். வளமார்ந்த மொழியாக, வழக்கில் என்றென்றும் இருக்கும் மொழியாக, மாற வேண்டும் என்றால் நிலைத்த பழமையும், வளரும் புதுமையும் இரண்டறக் கலந்து இரண்டில் தன்மைகளையும் உள்ளடக்கியதாக, அந்த மொழி வளர்ந்து வர வேண்டும். மாற்றங்கள் என்பது, தவிர்க்க முடியாத இயற்கையின் விளையாட்டு இறைவனின் அருட்கொடை. மாற்றங்களுக்குத் தடை போடுவது என்பது, இன்றைய சர்வதேச அரங்கில் இருந்து, நம்மை நாமே தனிமைப்படுத்திக் கொள்வதற்கு,

- தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில், 'மகளிர் இயல்துறை' ஏற்படுத்தப்படும்.

- தர்மபுரம் ஞானாம்பிகை மகளிர் அரசுக் கலைக் கல்லூரிக்கு ரூ.10 இலட்சம் உதவி.


- காரைக்கால் அம்மையாரைத் 'தென்னக இசையின் தாய்' என்று இனி அழைக்கப்படும்.

- 'இன்றும் தமிழ், என்றும் தமிழ்' மாநாட்டின் எழுச்சி முழக்கமாகும்.

ஒப்பான செயலாகும். ஒரு மொழி, காலத்தின் மாற்றங்களுக்கு ஏற்ப, அனைத்துப் பணிகளையும், செம்மையாகச் செய்யும் திறமையும், வலிமையும் பெற்றால் தான், அந்த மொழி வளர்கின்ற மொழியாக இருக்கும்.

எனவே, தமிழ் மொழி வளர்ச்சியின் கூறுகளை, இங்கே அறிஞர்கள் ஒன்று திரண்டு, ஆராய்ந்து மொழியின் தனித் தன்மை அழிந்து விடாமலும் அதே நேரத்தில், காலத்தின் தாக்கத்திற்கு ஏற்ப, தன்னைப் புதுப்பித்துக் கொள்வதற்குத் தேவையான ஆற்றலை அதற்கு அளிக்க, தங்களது அறிவார்ந்த ஆலோசனைகளை வழங்கியுள்ளார்கள். மறைந்து வாழும், பழந்தமிழ் இலக்கிய உணர்வுகளைத் தட்டி எழுப்பி, தமிழ் மொழியின் தொன்மைச் சிறப்பையும், இலக்கிய மரபையும், இனம் காட்டி உள்ளார்கள். பழந்தமிழ்க் கலைகளையும், நாட்டுப்புறக் கலைகளையும் இங்கே நடத்திக் காட்டி, மக்களின் மனங்களில் அவற்றின் மீது, ஒரு





ஆத்மார்ந்த ஈடுபாட்டை ஏற்படுத்தி உள்ளோம். தமிழ் மொழியின் தாக்கம், நமது வாழ்வியல் முறையிலும் கலை இலக்கியங் களிலும் கலாச்சாரம், பண்பாடு ஆகிய வற்றிலும் உண்டு என்பதைத் தெள்ளத் தெளி வாகக் காட்டி உள்ளோம்.

இன்னும் எத்தனை ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும், தமிழ் மொழி, தனது சீரிளமை குன்றாமல், அதே தனிப் பண்புகளுடன் திகழ வைக்க, இன்றைய வளரும் தலைமுறை, உறுதி ஏற்க வேண்டும் என்று, இந்த மாநாட்டின் வாயிலாக, இன்றைய இளைய தலைமுறை யினரைக் கேட்டுக் கொள்கிறேன்.

ஐந்து நாட்களாகக் கோலாகலமாக நடைபெற்ற, இந்த எட்டாம் உலகத் தமிழ் மாநாடு தமிழ் வளர்ச்சிக்குப் புதிய பரி மாணத்தையும், ஒரு புதிய உத்வேகத்தையும், அளிக்கும் என்று நம்புகிறேன். அதற்கு முத்தாய்ப்பு வைப்பது போல் சில அறிவிப்பு களை இந்த மேடையில் உங்கள் முன் வழங்கு வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

*1. 1981*-ஆம் ஆண்டு, ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டின்போது, எனது அரசியல் ஆசான் புரட்சித்தலைவர் டாக்டர் எம்ஜிஆர் அவர்கள், தமிழ் மொழி வளர்ச்சிக்காக, "உலகத் தமிழ்ச் சங்கம்" ஒன்றை ஏற்படுத்தினார்கள். ஆனால் பல்வேறு காரணங்களால், அந்த உலகத் தமிழ்ச் சங்கம், சரியாகச் செயல்படவில்லை. புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், அன்று அறிவித்த உலகத் தமிழ்ச் சங்கம், மீண்டும் அதே மதுரையில், புதுப் பொலி வோடும், சிறப்போடும், அமைக்கப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகத் தமிழ்ச் சங்கம், தமிழக அரசின் ஆளுகைக்கு, உட்பட்ட ஒரு நிறுவனமாகவும் அதே நேரத்தில், பல்வேறு அறிஞர்கள், தங்களது கருத்துக்களை எடுத்துரைத்து, தமிழின் வளர்ச்சிக்குத் தொண்டாற்றுகின்ற, ஒரு அமைப்பாகவும் அமையும்.

தமிழின் தொன்மையான இலக்கியங் களையும், இலக்கணத்தையும், பராமரிப் பதோடு, எதிர் வரும் நூற்றாண்டுகளில், தமிழிலேயே அனைத்துத் துறைகளிலும், கல்வி கற்பதற்கான ஆயத்தங்களைச் செய்வதற்கும் இந்த அமைப்பு தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும். மொழி ஆராய்ச்சி சொற் களஞ்சியங்கள் தயாரித்தல் மொழி பெயர்ப்புகள் ஆகியவை இந்த அமைப்பால் மேற்கொள்ளப்படும்.

2. ஒரு மொழியின் "சொற் பிறப்பியல் அகர முதலி" அதாவது, Etymological Lexicon தயாரிப்பது என்பது, ஒரு கடினமான பணி ஆகும். பன்மொழியியல் வல்லுநர்களும், பல்துறை அறிஞர்களும், ஒருங்கே சேர்ந்து, ஆற்ற வேண்டிய மிகப் பெரிய பணியாகும். "செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் அகர முதலித் திட்டம்" இருபதாண்டுகளுக்கு முன்னர்

தொடங்கப்பட்டிருந்தாலும் இதுவரை இரண்டு பாகங்கள் மட்டுமே, தொகுத்து முடிக்கப்பட்டுள்ளன. இன்னும் முடிக்க வேண்டியப் பணிகள் ஏராளமாக உள்ளன.


எனவே, இந்தச் "செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் ஆய்வு நூல்" திட்டத்தை, முனைப் புடன் செயல்படுத்தி, இன்னும் ஐந்தாண்டுக் காலத்திற்குள், அதாவது 21-ஆம் நூற்றாண் டில் நாம் கால் எடுத்து வைப்பதற்கு முன், "தமிழ்ச் சொற் பிறப்பியல் ஆய்வு நூல்" வெளியிட வழிவகை செய்யப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. தமிழில் கலைக் களஞ்சியத்தை உருவாக் கும் திட்டம், 1947-ஆம் ஆண்டு தொடங் கப்பட்டு இருந்தும், இதுவரை, 10 தொகுப் புக்கள் மட்டுமே, வெளிவந்துள்ளன. அசுர வேகத்தில் முன்னேறி வரும், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப, இந்தக் கலைக் களஞ்சியங்களைப் புதுப்பிக்க வேண்டிய ஒரு கட்டாயம் ஏற்பட்டுள்ளதால், இந்தப் பணி இடையிலேயே நின்று விட்டது. பல்துறைகளில் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, 'தமிழ்க் கலைக் களஞ்சியத்தை', முற்றிலும் புதிய வடிவத்தில் வெளியிடுவதே, சாலச் சிறந்தது ஆகும். உலகளாவிய புதுமை வாய்ந்த, மிகச் சிறந்த கலைக் களஞ்சியங் களின் அடிப்படையில், தமிழில் புதிய கலைக் களஞ்சியம் ஏற்படுத்துவதற்குத் தமிழக அரசு, அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் என்பதை, மிக்க மிகழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.


4. தமிழ் மொழி, அதிகமாகப் பேசுகின்ற மக்கள் வாழும், அயல்நாடுகளில் அமைந் துள்ள பல்கலைக் கழகங்களில், தமிழுக்கு என்று ஒரு இருக்கையினை, A Chair for Tamil Studies ஏற்படுத்தி அதன் மூலம், தமிழை வளர்ப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப் படும் என்பதையும், மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ் இருக் கைகள் ஏற்படுத்துவதற்கான, அயல்நாட்டுப் பல்கலைக் கழகங்கள், விரைவில் தேர்வு செய்யப்படும், என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. தஞ்சைத் தரணியில், தமிழை வளர்க்கின்ற மாபெரும் பணியில், பல காலமாக ஈடுபட்டு வருகின்றது, கரந்தைத் தமிழ்ச் சங்கம். அச்சங்கத்தின் மாணவர் இல்லம், தமிழ் பயிலும் மாணவ, மாணவி யருக்கான உணவு விடுதி, கூடுதல் நூலகக் கட்டடம், போன்ற கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்கு, 75 இலட்சம் ரூபாய் நன் கொடை, தமிழக அரசின் சார்பில் வழங்கப் படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரி வித்துக் கொள்கிறேன்.




எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டுத் தொடக்க நாளில், மத்திய அஞ்சல் துறை, சிறப்பு அஞ்சல் உறை ஒன்றை வெளிமிட்டுள்ளது. இந்த உறையின் மேல், உலகத் தமிழ் மாட்டின் இலச்சினை வண்ணத்தில் அச்சிடப் பட்டுள்ளது.



6. சங்க கால இலக்கியங்களின் வாயிலாக, தமிழ்ப் பெண்டிர், சமுதாயத்தில் எத்தகைய தொரு, சிறப்பான அங்கத்தை வகித்தார்கள் என்பதை, நாம் அறிய முடிகின்றது. எனவே, சங்க காலம் முதல், 20-ஆம் நூற்றாண்டு வரை, மகளிர் மேம்பாட்டை ஆய்வு செய்வ தற்காக, மகளிர் இயல் துறை, அதாவது, Department of Women Studies, என்ற ஒரு புதிய துறை, தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் ஏற்படுத்த, நடவடிக்கை எடுக்கப்படும் என் பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

7. மயிலாடுதுறையில் உள்ள, தர்மபுரம் ஞானாம்பிகை மகளிர் அரசுக் கலைக் கல்லூரியில், "செயல் முறைத் தமிழ்", என்ற புதிய பாடத் திட்டம், இந்த ஆண்டு முதல் துவக்கப்பட்டுள்ளது. தமிழ் வளர்ச்சிக்கு ஊக்கம் தரும் வகையில், எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் நினைவாக, அந்தக் கல்லூரியில், புதிய கட்டடம் கட்டிக்கொள்ள, 10 இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள் கிறேன்.

8. காரைக்கால் அம்மையார் அவர்கள் தமது தமிழ்ப் பண்களால், வகுத்துத் தந்த இசை முறை தான், பல்வேறு திராவிட மொழிகளின், இன்றைய இசை வளர்ச்சிக்கு, அடிப்படையாக விளங்கிக் கொண்டிருக் கிறது. கர்நாடக இயல், இசை மேதைகளுக்கும், தேவாரப் பண்ணிசை பாடிய நாயன் மார்களுக்கும், முற்பட்ட காலத்தில், வாழ்ந்த காரைக்கால் அம்மையார் பாடிய, "நட்ட பாடை" பண்ணும், "இந்தள" பண்ணும், அவரது காலத்திற்குப் பின்னால் தமிழ், தெலுங்கு, கன்னடம், வடமொழி, மலையாளம் ஆகிய மொழிகளில், இசையை வளர்த்தவர் களுக்கு முன்னோடியாக, வழிகாட்டியாக விளங்கியது. தென்னக மொழிகளில், பிற்கால இசை வளர்ச்சிக்கு வித்திட்ட, இசை முன்னோடி, மூத்த தமிழ் மகள், காரைக்கால் அம்மையார் அவர்களைத் "தென்னக இசையின் தாய்" என்று வாயாரப் போற்றி மகிழ்வது, சாலப் பொருந்தும் என்று கருதுகிறேன். இன்று நாம் மகிழ்ந்து போற்றும் பல்மொழி இசை மேதைகளுக்கு, தனது தமிழ்ப் பண்களால் வழிகாட்டிய காரைக்கால் அம்மையாரைத் "தென்னக இசையின் தாய்" என்று இனி அழைப்போம் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

9. 1981-ஆம் ஆண்டு, ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டின் இறுதியில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், 'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' என்று முழங்கினார்கள். சீரிய முறையில் நடைபெற்ற, இந்த எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் விளைவாக, தமிழ் வளர்ச்சிக்கு, ஒரு புதிய பரிமாணத்தையும், உத்வேகத்தையும் ஏற்படுத்தியுள்ளதை நிரந், தரமாக்கிடவும், அறிவியலிலும் தமிழ் அனைத்



# பின்லாந்து மொழியில் திருக்குறள் !

திருக்குறள் உலகின் பல மொழிகளில் மொழி பெயர்க் கப்பட்டுள்ளன. இப்போது பின்லாந்து நாட்டுப் பினிஷ் மொழியிலும் மொழிபெயர்க் கப்பட்டுள்ளது. இந்த நூல் விரைவில் வெளிவரவிருக் கின்றது.

உலகத் தமிழ் மாநாட்டின் ஆய்வரங்கில் இத்தகவல் தெரி விக்கப்பட்டது. ஹெல்ஸின்கி பல்கலைக்கழக மொழியியல் பேராசிரியர் அஸ்கோ பார் போலா அவர்கள் இந்தத் தக வலைத் தெரிவித்தார்.

"திருக்குறள் பினிஷ் மொழி யில் மொழி பெயர்க்கப்படுவது போல், பினிஷ் மொழியின் தேசியக் காப்பியம் தமிழில் மொழிபெயர்க்கப்படும்" என் றும் அவர் தெரிவித்தார்.

திலும் தமிழ் என்பதை உணர்த்திடவும், "இன்றும் தமிழ், என்றும் தமிழ்" என்ற புதிய முழக்கத்தை, இந்த மாநாட்டின் எழுச்சி முழக்கமாக அறிவிப்பதில், நான் பெரு மிதமும், பேருவகையும் அடைகின்றேன்.

இந்த மாபெரும் எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டிற்கு வருகைத் தர வேண்டும் என்று, மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு பி.வி. நரசிம்மராவ் அவர்களை, நான் நேரில் சென்று அழைத்த உடனேயே, இரண்டாவது சிந்தனையின்றிப் பெருந்தன்மையுடன் தனது ஒப்புதலை அளித்தார்கள்.

இந்த மாநாடு, வெற்றிகரமாக நடைபெற வேண்டும் என்பதற்காக, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள், மத்திய அரசின் சார்பில், எல்லா வகையிலும் ஒத்துழைப்பை நல்கி யுள்ளார்கள், என்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டுள்ளேன். சில தரப்புகளிலிருந்து, காழ்ப்புணர்வுடன், எதிர்ப்புகள் எழுந்தபோது, அவற்றை எல்லாம் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள், பொருட்படுத்தவில்லை. மாறாக, தமிழ் மொழியின் மீதும், தமிழக மக்களின் மீதும், தனக்கு உள்ள மதிப்பையும், அன்பையும், வெளிப்படுத்தும் வகையில், மத்திய அரசின் அனைத்துத் துறைகளின் மூலமாக, தனது ஒத்துழைப்பை நமக்கு அளித் துள்ளார்கள்.

எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டின் நினைவாக, இராசராசன் சிறப்புத் தபால் தலை, இன்று இங்கே வெளியிடப்பட வுள்ளதற்கும், மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு பி.வி. நரசிம்மராவ் அவர்கள், எடுத்துக் கொண்ட அக்கறைக்கும், முயற்சிக்கும், நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.


இந்த மாநாடு வெற்றி பெறுவதற்காகத், தனிப்பட்ட முறையில் ஆர்வம் காட்டிய, மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு பி.வி. நரசிம்மராவ் அவர்களுக்கு, தமிழ்கூறும் நல்லுலகத்தின் சார்பில், எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டெல்லியில் இருந்து வந்து, இந்த மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்பித்த, மாண்புமிகு மத்தியத் தகவல் தொடர்புத் துறை இணை அமைச்சர், திரு சுக்ராம் அவர்களுக்கும், எனது நன்றியைத் தெரிவித் துக் கொள்கிறேன்.


அகில உலகமே அதிசயிக்கும் வண்ணம், சீரோடும் சிறப்போடும் நடைபெற்ற, இந்த மாநாட்டின் வெற்றிக்காக, இரவு பகல் என்று பாராது, கடுமையாக உழைத்த, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர், அண்ணன் எஸ்.டி.எஸ். அவர்களுக்கும் அவருக்கு உறுதுணையாக இருந்து பணியாற்றிய, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர் களுக்கும், வாரியத் தலைவர்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும் காவல் துறை அலுவலர் களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாநாட்டு நிகழ்ச்சிகளில் பங்கு கொண்ட அறிஞர் பெருமக்களுக்கும், கலை வித்தகர்களுக்கும், பள்ளி மாணவிகளுக்கும், அவர்களைப் பயிற்றுவித்த ஆசிரியப் பெருமக்களுக்கும், பெருந்திரளாக வந்திருந்த பொதுமக்களுக்கும், எனது நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

# உலகத் தமிழ் மாநாடு: சில அலங்கார ஊர்திகள்











ஆசிரியரும் வெளியிடுபவரும் : தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927



தூய
பட்டு
தூய
சரிகை
ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.
கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி
HTA.7556.95

பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23

